பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 02 வெள்ளிக்கிழமை (15.04.2011) பக்கங்கள் 12+IV ஓசை – 198

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD
IATA



(C/638)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

## உலகின் சக்திமிக்க தலைவர்கள் யார்? மகிந்த ராஜபக்ஷவும் அவர்களில் ஒருவர்

### புலிகளைத் தோற்கடித்து நிரூபிக்கப்பட்ட பலம்



(கொழும்பு)

உலகின் அதிசக்தி வாய்ந்த முன்னணித் தலைவர்களின் பட்டியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருபத்தியெட்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறார். பிரபல ஆங்கிலப் பத்திரிகையான டைம்ஸ் தனது கணிப்பின்படி மேற்படி பட்டியலைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. டைம்ஸ் பத்திரிகையால் பட்டியலிடப்பட்டுள்ள உலகின் சக்திவாய்ந்த நூறு தலைவர்களின் பட்டியலில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இடம்பெற்றுள்ளார்.

டைம்ஸ் பத்திரிகையின் பிரஸ்தாப (12ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலி உறுப்பினருக்கு கனடாவில் அகதி அந்தஸ்து

(கொழும்பு)

கடந்த ஆண்டு இறுதியில் சன் சீ கப்பலில் 490 பேருடன் கனடா சென்றிருந்த அகதிகளில் மூவர் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் என, தடுத்து வைக்கப்பட்டவர்கள் மீது நீதிமன்ற விசாரணைகள் இடம்பெற்றது.

இந்தநிலையில், நீதிமன்றில் நடைபெற்று வந்த வழக்கில், குறித்த நபர் முன்னாள் கடல் புலித்தளபதி நிலை உறுப்பினர் எனவும், அவர் ஆயுதப் பயிற்சி எடுத்தவர் எனவும், ஆனால், தற்போது அவர் புலி உறுப்பினர் இல்லையெனக் கூறிய நீதிமன்றம் அவரை விடுதலை செய்துள்ளது.

அத்துடன், குறித்த நபருக்கான அகதி அந்தஸ்து உரிமையினை வழங்கும் படியும் குடிவரவு, குடியகல்வு அமைச்சுக்கு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

# நிபுணர் குழுவின் பரிந்துரைகள்

# பக்கச்சார்பற்ற நடவடிக்கை

## அழுத்தங்களுக்கு ஐ.நா. அடி பணியுமா?

(நியூயோர்க்)

**இலங்கையின் விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் இறுதி அறிக்கையை உலகுக்குப் பகிரங்கப் படுத்துவதா அல்லது அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட சிபார்சுகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துவதா என்பது குறித்துத் தீவிர பரீசீலனை நடைபெற்று வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபையின்** **(11ஆம் பக்கம் பார்க்க)**

## சிறுவன் மீது துப்பாக்கிச் சூடு; திருமலையில் நடந்த மர்மம்

(திருகோணமலை)


திருகோணமலை, தம்பலகாமம் சிராஜ் நகர் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் 17 வயது சிறுவன் ஒருவன் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் அவர், கந்தளாய் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கப்பல் அகதிகள் விவகாரம் சூடான விவாதப் பொருளாகிறது

### கனேடியப் பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் ஆயுதம்



(கொழும்பு)

கனடாவின் பொதுத் தேர்தலின் ஒரு அங்கமாக கனடாவின் நான்கு பிரதான கட்சிகளின் தலைவர்களும் பொதுவாக ஒரு நாள் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் கலந்து கொள்வார்கள்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கனகராயன் குளத்தில் புலிகளின் ஆயுதப் புதையல்

### அண்மையில் புதைக்கப்பட்டதற்கான தடயங்கள்

(கொழும்பு)

அண்மைக்காலத்தில் புதைக்கப்பட்டிருந்த ரொக்கட் லோஞ்சர்கள் உள்ளிட்ட ஒரு தொகை ஆயுதங்கள் கனகராயன் குளத்தில் இராணுவத்தினரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ரொக்கட் லோஞ்சர்கள் மற்றும் கண்ணிவெடிகள், கைக்குண்டுகள் என்பன அங்கிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ள ஆயுதங்களில் உள்ளடங்கும். அதேவேளை, அவை மிக அண்மைக்காலத்தில் அப்பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதற்கான தடயங்கள் காணப்படுவதாக இராணுவ அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார். வேறிடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்த ஆயுதங்கள் கனகராயன்குளம் பகுதிக்கு அண்மையில் கொண்டு வந்து புதைக்கப்பட்டதாகவோ அல்லது இது வரை வெளியில் ஒளித்துவைக்கப்பட்டிருந்த அவை அண்மைக் காலத்தில் யாரேனும் நபர்களால் பூமிக்குள் புதைக்கப்பட்டதாக இருக்கலாம் என்றும், அதனைக் கண்டெடுத்த இராணுவக்குழுவின் அதிகாரி கருத்து வெளி (12ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டைக் கல்லாறில் விபத்து மூவர் படுகாயம்

(கொழும்பு)

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோட்டைக்கல்லாறு பகுதியில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று இரவு 7.45 மணியளவில் மட்டக்களப்பு-கல்முனை பிரதான வீதியில், மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக இந்த விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முச்சக்கர வண்டி ஒன்றை வான் ஒன்று முந்திச்செல்ல முற்பட்ட போது முச்சக்கர வண்டியை வான் (11ஆம் பக்கம் பார்க்க)

## புத்தாண்டுக் கொண்டாட்டம் நேற்றைய அறுவடை என்ன?

### கொழும்பில் மட்டும் 200 பேர் படுகாயம்

(கொழும்பு)

புத்தாண்டு கொண்டாட்டங்களில் பட்டாசு விபத்தினாலும், வாகன விபத்தினாலும் பாதிக்கப்பட்ட 200இற்கும் மேற்பட்டவர்கள் கொழும்பு தேசிய வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத் தியசாலைப் பேச்சாளர் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், (11ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அணுக்கதிர் வீச்சு; அடியோடு மறுக்கிறது அரசு

(கொழும்பு)

ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பம், சுனாமி அனர்த்தங்களினால் அங்குள்ள அணு உலையில் ஏற்பட்ட வெடிப்பினால் பரவிய அணுக்கதிர்வீச்சு இலங்கையிலும் பரவியுள்ளதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என இலங்கையின் தேசிய அணுக்கதிர் அதிகாரசபை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்கிரம தெரிவிக்கையில்,

ஜப்பானில் ஏற்பட்ட அணு உலை வெடிப்பினால் ஏற்பட்ட அணுக்கதிர்வீச்சு பசுபிக் சமுத்திரம் ஊடாக இலங்கையில் பரவியுள்ளதாக வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

இவ்வாறு வெளியான செய்தியையிட்டுப் பொதுமக்கள் எவரும் அச்சமடையத் தேவையில்லை.

இதேவேளை, மழைநீர் மற்றும் மண் என்பன பரிசோதனைக்கு எடுக்கப்பட்டதெனவும், அதில் மேற்கொண்ட பரிசோதனையின் போது, அணுக்கதிர் வீச்சு தொடர்பாக எவ்வித தாக்கமும் இடம் பெற்றிருக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 0112533449 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொள்ளலாம் என இலங்கையின் தேசிய அணுக்கதிர் அதிகார சபை அறிவித்துள்ளது.

### மாணவச் செல்வங்களே

☞ உள்ளே கல்வி முரசு

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி I, பகுதி II இன் விடைகளும், கற்றல் குறிப்புகளும் இணைக்கப்பட்டுள்ளது.



யாழ். தினமுரசு பத்திரிகை நிறுவனத்தின் புத்தாண்டு நிகழ்வின்போது...

# பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு 512 படைப்பிரிவினர் பரிசில் வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2010 ஆம் ஆண்டு இடம் பெற்ற 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று தமது பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவன், அரியாலை 512 ஆம் படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிறு வயதிலே தந்தையை இழந்த நிலக்ஷன் ஜிராட் 2010 ஆம் ஆண்டு இடம் பெற்ற 5 ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று சித்திடைந்தான். தொடர்ந்தும் சிறப்பாக தனது கல்வியைத் தொடரும் ஆசை அவனுக்கு இருந்தாலும் கூட, விதவையான அவனது தாயால் அதை நிறைவேற்றுதல் சிரமமாக இருந்தது.

நன்கு படிக்கக்கூடிய இம் மாணவனின் தேவையை அறிந்த அப்பகுதி இராணுவத்தினர், அச் சிறுவனது கல்வித் தேவைகளுக்கென மாதாந்தம் ரூபா1000 வழங்கக்கூடிய வகையிலான ஓர் புலமைப் பரிசிலை ஏற்பாடு செய்தனர். இதற்கான நிதி உதவியானது அப்பிரதேசத்தைச் சேர்ந்த கருணை உள்ளம் படைத்த திரு.ஜகனேஷன் எனப்படும் வர்த்தகரால் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் திரு.ஜகனேஷன் அவனது வகுப்பறைக்கு நிறப்பூச்சு பூசுவதற்கும் முன் வந்துள்ளார். மேலும் வருடாந்தம் வகுப்பறையின் தளபாடங்களையும் கற்பித்தல் உபகரணங்களையும் திருத்துவதற்கான நிதி உதவியை வழங்கு வதாக அவர் ஒப்புக் கொண் டுள்ளார்.

இவ்வைபவத்தில் 51 ஆம் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக வெல்கம, 512 ஆம் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி கேனல் அஜித் பல்லவளவும் கலந்து கொண்டனர்

# கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

மறைந்த சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் சி. தனபாலன் ஞாபகார்த்த 6பேர் கொண்ட 5ஓவர் கிரிக்கட் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இதில் வடமாகாணத்தைச்சேர்ந்த 16 அணிகள் மோதுகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி (சிவப்பு அணி), சென்.ஜோன்ஸ் கல்லூரி (கறுப்பு அணி), சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்து கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கனகரத்தினம் ம.ம.வி., ஹாட்லி கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி, மன்னார் சென் சேவியர் கல்லூரி, வவுனியா மத்திய கல்லூரி, கைதடி நவீல்ட் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, மகஜனா கல்லூரி.

15ஆம் திகதி போட்டி நடைபெறும் மைதானங்கள்-

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி.

16ஆம் திகதி போட்டி நடைபெறும் மைதானங்கள்-

சென்.ஜேன்ஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி.

இறுதி போட்டி 16.04.2011 சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானம் பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியும் யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கமும் இணைந்து நடாத்தும் இப் போட்டிக்கு பி.ஓ.சி இலங்கை வங்கி அனுசரணை வழங்குகின்றது. 15ஆம் திகதி லீக் முறையில் போட்டிகள் நடாத்தப்பட்டு சிறந்த எட்டு அணிகள் தெரிவு செய்யப்பட்டு 16ஆம் திகதி விலகல் முறையில் போட்டி நடாத்தப்படும்.

# பௌர்ணமி விழா

(சாவகச்சேரி)

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் பௌர்ணமி தின கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணக்கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண கல்வி மற்றும் விளையாட்டுத்துறை பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் தென்மராட்சி வலய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (11)


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

செல்வராசா கஜீவன், 130, சேவிஸ்வீதி, கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி, என்பவரது தே.அ.அட்டை (921574398V) 155ஆம் கட்டைக்கும் இரணைமடுச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கனகாம்பிகைக் குளம் கிராம அலுவலரிடம் ஒப்படைக்கவும். (C/518)


# மண்டைதீவுக்கு குடிநீர் நடவடிக்கைகள் ஆரம்பம்

மண்டைதீவு மக்களால் எதிர்நோக்கப்படும் குடிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அல்லைப்பிட்டிப் பகுதியில் இருந்து குழாய் மூலம் குடிநீரைக் கொண்டு வர நீர்ப்பாசணத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் ஒரு கட்டமாக அல்லைப்பிட்டியிலிருந்து குழாய்கள் புதைக்கப்பட்டு தற்போது மண்டைதீவு அல்லைப்பிட்டி இணைப்பு வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு வீதியில் கிடங்கு வெட்டும் இயந்திரம் (பைக்கோ) செல்ல முடியாத காரணத்தினால் அப் பகுதிகளில் குழாய்கள் புதைக்கும் பணிகளை மக்களைக் கொண்டு செய்வதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, மண்டைதீவுப் பகுதிக்குள் (மண்டைதீவு வைத்தியசாலையிலிருந்து) குழாய்கள் புதைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் மேற்படி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மண்டைதீவுப் பகுதிக்குள் பத்து இடங் களில் நீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தீவகத்தில் திருட்டுக்கள்

வேலணை மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதிகளில் அண்மைக் காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அவ் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர். வீட்டு உரிமையாளர்கள் வெளியில் செல்லும் வேளைகளில் இவ்வாறான திருட்டுக்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின் றது. வீடுகள் பூட்டிக் கிடக்கும் பட்சத்தில் உள்ளே சென்று, தேங்காய், கோழி மற்றும் வீட்டுக்கு வெளியில் உள்ள பெறுமதி மிக்க பொருட்கள் என்பவற்றையே இத் திருடர்கள் திருடிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இத் திருட்டுச் சம்பவங்களில் உள்ளூர் வாசிகளே ஈடுபட்டு வருகின்றனர் எனவும் ஊர்மக்கள் தெரிவிக்கின்றனர்.

# புத்தாண்டுக்கொண்டாட்டம் நெடுந்தீவில் குதூகலம்

## கடற்படையும் இணைந்து ஏற்பாடு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு கடற்படையினரும் நெடுந்தீவு பொதுமக்களும் இணைந்து தமிழ் சிங்கள புதுவருடத்தினை முன்னிட்டு நடாத்தும் பிரமாண்டமான களியாட்ட நிகழ்வு எதிர்வரும் 20.04.2011ஆம் திகதி (புதன்கிழமை) நெடுந்தீவு கடற்படை முகாமுக்கு அருகில் அமைக்கப்பட்ட விசேடமான விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. மேற்படி களியாட்ட நிகழ்வில் நெடுந்தீவுப் பகுதியை சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், குதிரைச்சவாரி என்பவற்றுடன் பொதுமக்களுடன் இணைந்து கடற்படையினரும் படகுச்சவாரி, ஆணழகன் போட்டி, அழகுராணி போட்டி, கிறிஸ்கம்பம் ஏறுதல், முட்டி உடைத்தல் போன்ற பாரம்பரியப்போட்டிகளையும் நடாத்தவுள்ளனர்.

மேலும் அன்றையதினம் இரவு பிரமாண்டமான இசை நிகழ்ச்சி ஒன்றினையும் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (27)

# திருமலை நலன்புரிச் சங்கம் மாணவர்களுக்கு நிதியுதவி

(திருமலை)

கனடாவைத் தளமாகக் கொண்டியங்கும் திருகோணமலை நலன்புரிச் சங்கமானது திருகோணமலை மாவட்டக் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவரில் போராலும் இயற்கைப் பேரிடராலும் பாதிக்கப்பட்ட 79 மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக 5000 ரூபா வீதம் வழங்கியது. 12.04.2011 அன்று முற்பகல் 10 மணிக்குத் திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான திரு. இரா. சம்பந்தன் இந் நிகழ்ச்சிக்குத் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி மாணவருக்கான காசோலைகளை வழங்கினார்.

திருகோணமலை நகர சபைத் தலைவர் திரு. செல்வராசா, மூதூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் திரு.திருச்செல்வம் உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றப் பேராளர்களும் திருகோணமலை மாவட்ட பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளரும் இவ்விழாவில் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

திருகோணமலையைத் தளமாகக் கொண்டியங்கும் திருகோணமலை நலன்புரிச் சங்கம் மற்றும் திருகோணமலை மாவட்ட அகதிகள் நலன்புரிச் சங்கம் ஆகிய அமைப்புகள் நிதியுதவிக்குத் தகுதியான மாணவரைத் தெரிவு செய்ததோடு இந்த நிகழ்ச்சியை யும் ஒழுங்கு செய்திருந்தன.

# மாபெரும் சிலுவைப்பாதை பவனி; நெடுந்தீவில் இன்று உற்சவம்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு பங்கு ஆலயங்கள் ஒன்றிணைந்து நடாத்தும் மாபெரும் சிலுவைப்பாதை நிகழ்வு இன்று 2.00 மணிக்கு நெடுந்தீவு மேற்கு சென்.றோலன்சியார் ஆலயத்தில் இருந்து நெடுந்தீவு கிழக்கு குடவிலி விஜாகுலமாதா ஆலயம் வரை நடைபெறவுள்ளது.

மேற்படி சிலுவைப்பாதை நிகழ்வுகள் நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு. அமலராஜ் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது. இச்சிலுவைப்பாதையில் நெடுந்தீவு ஆலயப்பங்குகளான புனித அந்தோனியார் ஆலயம், புனித யுவானியார் ஆலயம், புனித யாகப்பர் ஆலயம், புனித தோமையார் ஆலயம், புனித லோறன்சியார் ஆலயம், புனித சவேரியார் ஆலயம், புனித பற்றிமா அன்னை ஆலயம், புனித மரியன்னை ஆலயம், ஆகிய சகல ஆலயங்களின் பங்குமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி சிலுவைப்பாதையினை சிறப்பாக நடத்துவதற்கு சகல மக்களும் உரிய நேரத்துக்கு சமூகம் தந்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர். (27)

நீதி எங்கே வெல்லும்? அநீதிக்கு ஆளானவர்களுடன் அதற்கு ஆளாகாத மற்றவர்களும் சேர்ந்து நியாயம் வழங்கப்படுவதில் அக்கறை காட்டுகிறார்களோ அங்கேதான் நீதி வெல்லும்.

-ஸோலன்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

# எல்லாமே நலமுறும்

பலவிதமான துன்பதுயரங்களுக்கு மக்களை ஆளாக்கிய விகிர்தி வருடம் விடைபெற்றுச்செல்ல கர வருடம் நேற்றுப் பிறந்துள்ளது.

பிறக்கின்ற ஒவ்வொரு புது வருடங்களிலும் மக்கள் இன்பத்தையும் துன்பத்தையும் மாறி மாறி அனுபவித்து வந்துள்ளார்கள்.

மூன்று தசாப்தகால கொடூர யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபின் தமிழ் மக்களுக்கு ஆறுதலையும் நிம்மதியையும் அளிக்கக்கூடிய புது வருடமாகப் பிறந்துள்ளது.

யுத்த பூமியாக இருந்த தமிழ்ப் பிரதேசங்கள் இன்று அமைதியும் சாந்தியும் நிலவும் பிரதேசமாக மாறியுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக கர வருடக் கொண்டாட்டங்கள் களை கட்டியிருந்தது.

மக்கள் சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் புதுவருடத்தைக் கொண்டாடக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர். இத்தகையதொரு சூழ்நிலையை எதிர்பார்க்காத அரசியல்வாதிகளில் ஒருசிலர் படையினரின் வற்புறுத்தலின் பேரிலேயே மக்கள் புதுவருடத்தைக் கொண்டாடுகிறார்கள் என்று வழமையான அறப்பாணியில் அறிக்கைகள் விடுகிறார்கள்.

புதுவருடத்தைக்குதூகலமாகக் கொண்டாடும் மக்களுக்கு இவர்களின் அறிக்கைகள் நச்சுத் தன்மையை ஊட்டக்கூடியதாக அமைந்துவிடுகிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென்ற எண்ணம் ஒவ்வொரு தமிழ் மகனதும் இதயத்தில் மேலோங்கியுள்ள இவ்வேளையில் அதில் மண்ணைவாரித் தூவுமாப் போல் கேவல்மான முறையில் நடந்துகொள்பவர்களிடத்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

நாட்டைக் குறிப்பாக தமிழ்பிரதேசங்களின் அபிவிருத்தியில் நாட்டம் கொண்டு அதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டுவருபவர்களுக்கு கால் கட்டு போடும் விதமாக அருவருக்கத்தக்க செயல்களில் சிலர் ஈடுபட்டுவருவதையும் அவதானிக்க முடிகிறது.

இவர்களது அருவருக்கத்தக்க செயல்களினால் அமைதிப்பூங்காவாக மாறிவரும் தமிழ்ப் பிரதேசங்கள் மீண்டுமொரு முறை அவலங்கள் நிறைந்த பிரதேசங்களாக மாறுவதற்கு எவரும் இடமளிக்கக் கூடாது

யுத்தத்தின் முடிவை அடுத்து, தமது விடிவை நோக்கிய ஆரோக்கியமான வாழ்வில் அடியெடுத்து வைத்துள்ள மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை சில அரசியல்வாதிகள் மறப்பது ஏன் என்று தெரியவில்லை.

மக்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு, அதாவது மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, காணாமல்போனோர் தொடர்பாகவும் மற்றும் அபிவிருத்தி என்பவற்றிலும் தீர்வுகாணவேண்டுமென்ற நோக்கில் அவற்றை அணுகி, அவற்றுக்குரிய தீர்வினைக்காண வேண்டியது அவசியமானதாகும்.

சுமுகமான முறையில் சிவில் நிர்வாகம் நடைபெற்று வரும் வேளையில், அதற்குப்பாதிப்போ குந்தகமோ ஏற்படுத்தக்கூடியவாறான நடவடிக்கைகளில் சில மக்கள் பிரதிநிதிகள் ஈடுபட்டுத் தம்மை நம்பி வாக்களித்த மக்களுக்குத் துரோகம் இழைக்கும் வகையில் செயற்பட்டுவருவதையும் காண முடிகிறது.

இனங்களுக்கிடையிலான பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்தி, அரசியல் குரோதங்களுக்கும் காழ்ப்புணர்வுகளுக்கும் இவ்வருடம் பெரும்பாலும் முடிவுகாண வேண்டும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இவற்றுக்கெல்லாம் கர வருடப்பிறப்பு முற்றுப் புள்ளிவைத்து மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் ஆண்டாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

# ஆலய வழிபாடுகளில் ஈடுபட்ட அமைச்சர் பக்தர்களுடன் கலந்துரையாடினார்



(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புதுவருட தினமான நேற்றைய தினத்தில் யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் வருடாந்த தேர் உற்சவத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரி கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டதுடன் வடம் பிடித்துத் தேர்ப் பவனியையும் ஆரம்பித்து வைத்தார்.

சித்திரைப் புதுவருடப் பிறப்பான நேற்று யாழ்ப்பாணம் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலின் 9 ஆம் நாள் திருவிழா என்பதுடன் வருடாந்த தேர்த் திருவிழாவுமாகும்.

இதனையடுத்து நேற்று அக்கோயிலுக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பக்தர்கள் புடைசூழ சிறப்புப் பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கணேசராஜக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து வடதைப் பிடித்து தேர்ப் பவனியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

நேற்றைய சிறப்புப் பூசை வழிபாடுகளின்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு ஆசி வேண்டியும் பூசைகள் இடம் பெற்றதுடன், கோயிலுக்கு வருகை தந்திருந்த பக்தர்களுடனும் அவர் கலந்துரையாடினார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) மற்றும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை யாழ்.நாக விகாரைக்கும் சென்ற அமைச்சர் பௌத்த மதகுருவிடம் ஆசி பெற்றதுடன், சிறப்பு வழிபாடுகளிலும் கலந்துகொண்டார்.

# குருநகரிலுள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படுவதில்லை

(கொக்குவில்)

குருநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள வடிகால்கள் கடந்த சில நாட்களாக யாழ்.மாநகர சுகாதாரப் பிரிவு ஊழியர்களால் துப்புரவு செய்யப்படாமல் இருந்து வருகிறது.

இதனால் கழிவுநீர் வெளியேற்றப்படாமல் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகிறது. அவற்றில் டெங்கு மற்றும் மலேரியா நோய்களைப் பரப்பும் நுளம்புகள் பெருகி தொற்று நோய்களை உருவாக்கும் அபாயம் தோன்றி உள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, வீதிகளில் குப்பை கூழங்கள் தேங்கிக் கிடக்கின்றன. வீதிகளைக் கூட்டிப் பெருக்கும் பெண் தொழிலாளர்கள் இப்பகுதிக்கு வந்து வருடக் கணக்காக இருக்குமெனவும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

நகரின் ஏனைய பகுதிகளை விடவும் குடிசனம் செறிந்து நெருககடியாக வாழ்கின்ற இப்பகுதியில் சுகாதாரச் சீர்கேடுகளால் நோய்கள் பரவும் அபாயம் தோன்றுவதாக எச்சரிக்கை விடுக்கப்படுகின்றது. (68)

# குருத்தோலை ஞாயிறு

(யாழ்ப்பாணம்)

கத்தோலிக்க மக்களின் புனித வாரத்தின் தொடக்க நாளான குருத்தோலை ஞாயிறு வழிபாடுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகின்றது.

அன்று காலை அனைத்து கத்தோலிக்க தேவாலயங்களிலும் விசேட பூசைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் பெரிய வியாழன், பெரிய வெள்ளி போன்ற தினங்கள் முக்கியமான தினங்களாக கத்தோலிக்க மக்களால் நினைவு கூரப்படுகின்றன.

அன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஆயர் தலைமையில் வழிபாடுகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (21)

# நிதியுதவி

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டையில் இயங்கி வரும் நல்லாயன் வரவேற்பு இல்லத்திற்கு 2010 ஆம் ஆண்டுக்குரிய பரிமான நன்கொடை மற்றும் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கான பணம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (104)

# வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவு அபிவிருத்திக் கலந்துரையாடலில் அமைச்சர்

(கரவெட்டி)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச செயலகப் பிரதேசங்களிலும், வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலும் அபிவிருத்தி சம்பந்தமான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குரிய கலந்துரையாடல் ஒன்று அண்மையில் பாரம்பரிய தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் முயற்சி அபிவிருத்தி முயற்சி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட மூன்று பிரதேசங்களினதும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பிரதேச செயலகங்களில் நடைபெறும் அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்களுக்கும் மாதாந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கும் பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்படுவதில்லையெனவும் இதனால் தமது பிரதேசத்தில் நடைபெறும் அபிவிருத்தி சம்பந்தமான வேலைத்திட்டங்கள் பற்றி அறிய முடியாதிருப்பதாகவும் தெரிவித்தனர்.

முக்கியமாக வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்று தொடக்கம் ஆழியவளை வரை 2309 குடும்பங்களைச் சேர்ந்த 6826 பேர் மீளக்குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்கான நிரந்தர வீட்டுத்திட்டம் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை பிரதான, குறுக்கு வீதிகள் எவையும் திருத்தப்படவில்லை, மருதங்கேணி, வைத்தியசாலை புனரமைக்கப்படவில்லை. இப்பிரதேசத்தில் வேலைத் திட்டங்கள் முன்னெடுப்பதற்கு வசதியாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், மற்றும் பருத்தித்துறைப் பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் என்பன முழுமையாக மருதங்கேணியில் இயங்க வேண்டும் எனவும் இவற்றுடன் 2006 ஆம் ஆண்டுக்குப்பின் குடத்தனையில் இயங்கி வரும் வடமராட்சி கிழக்கு கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,வடமராட்சி பனை, தென்னைவள அபிவிருத்திச் சங்கம், வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அலுவலகம் சமுர்த்தி வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கி ஆகியன மருதங் கேணியில் இயங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இப்பிரதேசத்தில் நடைபெறும் அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்கள், மாதாந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் பொது அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள வசதி ஏற்படுத்திக் கொடுப்பதுடன், குடத்தனையில் உள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில், அபிவிருத்தி சம்பந்தமான கூட்டங்கள், மாதாந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் தொடர்ச்சியாக குடத்தனை உப பணிமனை மண்டபத்திலேயே நடைபெறுகிறதாகவும் தெரிவித்தனர்.

ஆகவே இக்கூட்டங்களை மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் (மருதங்கேணி) நடாத்த ஒழுங்கு செய்யப்படவேண்டுமெனவும், இவை அனைத்துக்கும் உடனடித் தீர்வுகாண வசதியாக பருத்திததுறை - மருதங்கேணி பிரதான வீதி திறக்கப்பட வேண்டுமெனவும் இப்பிரதேச பொதுமக்கள் பிரதிநிதிகள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்குப் பதிலளித்த அமைசசர் மருதங்கேணி - பருத்தித்துறை வீதியில் கண்ணிவெடி அகற்றும் வேலைகள் முடிவடையாமையால் பாதை திறப்பது தாமதமாகும் எனவும அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாதாநத ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் என் பன சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி தமது அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியதுடன் அடுத்துவரும் ஒருங்கிணைப்புக் குழுக கூட்டத்தில் தான் கலந்துகொள்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (70)

# உயிருக்குப் பயந்து வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள் அரசு தேடுவதாகக் கூறி அங்கிருக்க வழி தேடுகிறார்கள்

இலங்கை அரசியல்வாதிகளில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பைச் சேர்ந்தவர்களும் புலிகளுக்கு ஆதரவாக இருந்த புலம் பெயர்ந்த தமிழர்களும் புலிகளுக்கு எதிரான ஆனந்தசங்கரி மற்றும் புளொட் அமைப்பினர் கூட கே. பத்மநாதனை எதிர்ப்பதில் தீவிரம் காட்டுகிறார்கள். இது ஏன் என்பது புரியவில்லை..

புலிகளையும் தனி ஈழக்கோட்பாட்டையும் கருத்தியல் ரீதியாக எதிர்த்த எனக்கு, வெறுப்புக்கலந்த பார்வையுடன் கே. பி. யை எதிர்ப்பதன் காரணம் புரியவில்லை. இந்த எதிர்பாளர்கள் எல்லோரும் வேறு காலத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரனையும் அவரது கோட்பாட்டையும் எவ்வித விமர்சனமும் இன்றி ஏற்றுக் கொண்டவர்கள் தான். மேலும் பிரபாகரன் பிற்காலத்தில் மட்டும் கெட்டுப்போனவர் அல்ல. மற்றவரால் கெடுக்கப்பட்டு சொல்வார் சொல் கேட்டு அழிந்து போனவரும் அல்ல. ஒவ்வொரு தவறான விடயத்திலும் பிரபாகரனது தனி முத்திரைதான் வெளிப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்துடன் போர்புரிந்த போதும் சரி, இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தியைக் கொன்ற போதும் சரி, அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களை சங்காரம் செய்த போதும் அவரது செயற்பாடு மன்னிக்கமுடியாதது. இவையாவும் இலங்கைத் தமிழ் மக்களை பாதாளம் நோக்கி பிரபாகரன் கைப்பிடித்து கொண்டுவந்த படிகள்.

இந்த விடயங்கள் நடக்கும்போது புலம் பெயர்ந்த தமிழர்கள் மற்றும் இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் பிரபாகரனை மேதாவி எனப் போற்றியதுடன், மேதகு என்ற பட்டமும் கொடுத்தார்கள். வன்னிக்குச் சென்று சல்யூட் அடித்தார்கள்.

இந்த நிலையில்தான் கே.பி.யும் இருந்திருக்க வேண்டும். மேலும் கே.பி இலங்கையில் இருக்காதது மட்டும் அல்ல நிச்சயமாக எனக்குத் தெரிந்தவரை ஒரு கொலைச் சம்பவத்திலும் அவர் ஈடுபடவில்லை. இந்த நிலையில் கே. பி. 2003 ஆம் ஆண்டில் இருந்து புலி இயக்கத்தில் இருந்து விலக்கப்பட்டிருந்த தகவலை சகல புலம் பெயர்ந்த புலி ஆதரவாளர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலையில் இயக்கத்தில் இரத்தக்கறை குறைவாகப் படிந்த ஒரு மனிதனாக நான் அவரைக் கருதுகின்றேன்.

இதை விட இலங்கை - மலேசிய அரசாங்கத்தால் கைதியாக்கப்பட்ட ஒருவர் என்ன செய்யமுடியும்.? சயனைட்டைக் குடித்து இறந்து ஒரு மாவீரனாகி இருந்திருக்கலாம்! ஆனால், சமாதி இருக்காது. கே பி.யை . இலங்கை அரசாங்கம் சுட்டுத்தள்ளி இருக்கலாம் அப்பொழுது அதற்காக மேற்கு நாடுகள் இலங்கை அரசை விசாரிக்கவேண்டும் என்றும் புலம் பெயர்ந்தவர்களும் ஆர்பாட்டம் செய்திருப்பார்கள். இதனால் யாருக்கு என்ன பயன்? ஒவ்வொரு உயிரும் விலைமதிக்க முடியாதது.

இலங்கை அரசாங்கம் கருணையால் கே.பியை உயிர் வாழ வைத்திருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. உணர்வுகளுக்கு அப்பால் உயிரோடு வைத்திருப்பது அரசாங்கத்துக்கு நல்லது. அத்துடன் கே. பி.யின் அழிவுக்குப் பயன்படுத்திய மூளையை ஆக்கத்துக்குப் பயன்படுத்தலாம் என நினைத்து வைத்திருக்கிறது..

தத்தம் உயிருக்கு விலையதிகம் என்பது புலம் பெயர்ந்தவர்களுக்குப் புரியும் . இந்த உயிருக்காகத் தான் இவர்கள் பொய்களைச் சொல்லி மேற்கு நாடுகளில் தஞ்சம் புகுந்தார்கள். பலர் இலங்கைக்குச் செல்ல விரும்பாமல், இன்னும் தங்களைத்தான் இலங்கை அரசாங்கம் தேடிக்கொண்டு இருக்கிறதென்று சொல்லிச்சொல்லி தங்கள் முக்கியத்துவத்திற்கு எண்ணெய் தடவிக் கொண்டிருக்கிறர்கள். சிட்னி வானொலியில (ATBC) விழல் கதை பேசும் ஒருவர் போர்நிறுத்த காலத்தில் கிளிநொச்சியில் சர்வதேசிய விமான நிலையம் அமைந்தால்தான் போவேன் என்றார். போர் முடிந்தபின்பு இலங்கை அரசாங்கம் தன்னைத் தேடுவதாகக் கூறி அவுஸ்ரேலியாவை விட்டு வெளியே போகாமல் இருக்கிறார். இப்படிபட்ட பயந்த மனிதர்கள் கே.பி.யை விமர்சிப்பதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

புலிகளுக்கு பயந்து தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வன்னியில் ஜிஞ்சா அடித்தார்கள். இந்த நிலையில் கே.பி. மட்டும் ஏன் பிரபாகரனுடன் உடன் கட்டை ஏறி தீக்குளிக்கவேண்டும்?

தமிழ் அரசியல்வாதிகள், கே.பி. அரசியலுக்கு வந்து விட்டால் என்ன செய்வது என்று பயப்படுவது தெரிகிறது.

கே.பி.க்கு வன்னியில் நிலம் கொடுத்தது கூட பலருக்கு உறுத்துகிறது. இந்த நிலங்கள் விடுதலைப் புலிகள் வைத்திருந்தவை. இதைவிட புலிகளில் இருந்த குடும்பங்களை கவனிக்கவே இந்த உதவிகள் தரப்படுகிறது. உதவிகள் செய்வதற்கே முன்வராத புலம் பெயரந்தவர்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் கே.பி.யை குறை சொல்வதில் என்ன நியாயம் இருக்கிறது?

என்னைப்பொறுத்தவரை புலிகளுக்கு ஆயுதம் கடத்திக் கொடுத்த பாவத்தில் ஒருபகுதியை கழுவுவதற்கு கே.பி. முன்வந்ததும் ஒரு நேர்மையான செயலாகவும் அதற்கு அரசாங்கத்தை சம்மதிக்க வைத்தது மிகத்திறமையான விடயமாகவும் பார்க்க முடிகிறது.

போர் நடக்கும் போது ஆயுதத்திற்குக் காசு கொடுத்த புலம் பெயர்ந்த அமைப்புகளில் எத்தனை பேர் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகிறார்கள்? நாடுகடந்த ஈழம், வட்டுக்கோட்டைத் தீர்மானம் மற்றும் ஆர்ப்பாட்டம் இத்தியாதி என பணத்தை விரயமாக்கும் இவர்கள் கடந்த இரண்டு வருடத்தில் செய்தவற்றை பட்டியல் போடுவார்களா? அவுஸ்ரேலிய தமிழ்காங்கிரசின் பிரசார பீரங்கிகளான இரண்டு பெண்மணிகளிடம் நான் கேட்டேன் "அங்குள்ள தமிழ் மக்களுக்கு உதவுவது முக்கியமில்லையா" என்று. அதற்கு அவர்கள் தந்த பதில் "அரசாங்கம் தான் இந்நிலையை உருவாக்கியது. எனவே அது அரசாங்கத்தின் கடமை." இவ்வளவுக்கும் அவர்களில் ஒருவர் மருத்துவர்.

எவ்வளவு பொறுப்பற்ற பதில்!

ஒருவர் அடித்து மற்றவர் காயமடைந்தால் அடித்தவனைத் துரத்துவதை விட காயமடைந்தவனுகது உதவுவதே மனித விழுமியம். இதைத்தான் பொலிஸ் கூட செய்யவேண்டும்.

தமிழர்கள் தங்களை ஆள முற்பட முன்பு பல விடயங்களில் மனிதத் தன்மை பெறவேண்டும்.

புலிகளில் இருந்து பிரிந்து இந்தியாவுக்குச் சென்ற கருணா என்ற முரளீதரனை இலங்கைக்குக் கொண்டு வந்து ஸ்ரீ லங்கா சுந்திரக் கட்சியின் பிரதித் தலைவராக்கி அமைச்சர் பதவி கொடுத்தவர் இலங்கை பாதுகாப்புச் செயலாளர் . அதே போன்று கைதியாக பிடிக்கப்பட்ட கே. பி. க்கு மருத்துவ உதவி வழங்கி மற்றும் தன்னார்வத் தொண்டு அமைப்பு நடத்த உதவி செய்ததும் அவரே. இந்த விடயங்கள் ஒருவிதத்தில் இராஜதந்திரம் ஆக இருந்தாலும் மறுபுறத்தில் இப்படியான செயல் செய்வதற்கு பெருந்தன்மையும் வேண்டும். பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டவர்களை இப்படி நடத்திய உதாரணம் உலகில் வேறு எங்கும் காட்டமுடியுமா? என்னைப்பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைத்து தமிழர்கள் பெறக் கூடியது ஏராளம். இருக்கிறது.

அரசியல் என்பது ஒரு செஸ் விளையாட்டு. இதில் ஓரளவுக்காவது தேர்ந்த ஒரு இலங்கைத்தமிழர் சௌமிய மூர்த்தி தொண்டமான் மட்டும்தான். வட மாகாணம் வைத்தியர்களையும், பொறியியலாளர்களையும், கணக்கியலாளர்களையும், சட்டத்தரணிகளையும் மட்டுமல்ல பிரபாகரனைப்போல அசுரனையும் தந்துவிட்டு, அரசில்வாதிகளைப் பொறுத்தவரையில் மலடியாகிவிட்டது.

நன்றி: இணையம்

## குருநகர் பாடுமீன் சம்பியனானது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக் கிழமை துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணியும், நாவாந்துறை சென் மேரீஸ் அணி மோதிக் கொண்டன. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் 2:1 என்ற கோல்க்கணக்கில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனாகத் தெரிவாகியது. (மி)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்கு கிராம அபிவிருத்தி மற்றும் மகளிர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாச பொதுக்கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச செயலக மண்டபத்தில் காலை 10 மணிக்கு மேற்படி கூட்டம் நடைபெறும். எனவே கிராமிய அபிவிருத்தி, மற்றும் மகளிர் அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பிர்களை தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுள்ளனர். (கா)

## சித்திரா பௌர்ணமி தினம்

(தும்பளை)

கற்கோவளம் ஸ்ரீ கும்பி முத்துமாரியம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 17.04.2011 ஞாயிற்றுக்கிழமை சித்திர பௌர்ணமி தினம் விசேஷமாகக் கொண்டாடப் படவுள்ளது.

அன்று காலை7.00 மணிக்கு வளந்துப் பூசை நடைபெற்று அதனையடுத்து ஆலயத்தில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவோர் தமது நேர்த்திகளைச் செய்வர்.

நாதஸ்வர - மேளக்கச்சேரியைத் தொடர்ந்து பி.பகல் 2.30 மணிக்கு அம்பாளின் வீதியுலா இடம்பெறும்.

இரவு நிகழ்ச்சியாக கற்கோவளம் நாடக விற்பன்னன் வே.நந்தகோபால் அவர்களின் நெறியாள்கையில் "காத்தவராயன்" சிந்து நடைக் கூத்து இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மா)



திருமறைக்கலாமன்றம் தயாரித்து வழங்கிய தவக்கால ஆற்றுகையான "கடவுள் வடித்த கண்ணீர்" காட்சிகள் சிலவற்றைப் படத்தில் காணலாம். படம்: மிதுலன்

# பதிவு செய்யப்பட்ட கழகங்களின் பிரதேச விளையாட்டு விழா நிகழ்வு

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான பிரதேச விளையாடடுவிழா 2011, எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு ஆழியவளை அருணோதயா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விளையாட்டு விழாவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி. ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம், 553 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல் கே.டபிள்யூ. ஆர்.டீ.அப்றூ ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வடமராட்சி பிரதேச அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், மன்னார் மாவட்ட தடகளப்பயிற்றுனர் கே.முகுந்தன் யாழ்ப்பாண மாவட்ட கால்பந்துப் பயிற்றுனர் பீ.முகுந்தன் கிளிநொச்சி மாவட்ட தடகளப்பயிற்றுநர் என்.முகுந்தன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (70)



காரைநகர் மேற்கு மருதபுரம் என்னும் இடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை 10.00 மணியளவில் தர்மலிங்கம் சந்திரகுமார் என்பவரது வீட்டில் தவறுதலாக ஏற்பட்ட தீயினால் வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது. இதில் வீட்டு உடமைகள், பொருட்கள் அனைத்தும் அழிவடைந்துள்ளதைக் காணலாம்.

## அங்குரார்ப்பண கூட்டம்

(யாழ்.நிருபர்)

சாவகச்சேரி றிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் க.அருந்தவபாலனும் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொண்டு கல்லூரி வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குமாறும் நிகழ்வின் அமைப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (10)

## மருதங்கேணி பொதுச்சந்தை மீண்டும் இயங்குகின்றது

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட மருதங்கேணி பொதுச் சந்தை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

முன்னர் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த இப் பொதுச் சந்தை மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதுடன் இச்சந்தை நடவடிக்கைகள் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இப்பொதுச் சந்தை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடாந்து மருதங்கேணி, ஆழியவளை, மாமுனை, மாசார் ஆகிய பகுதி களைச் சேர்ந்த மக்கள் பயன் பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சித்தி

(நெல்லியடி)

இலங்கை வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்துடன் யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடத்திய வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

எழுத்துப் பரீ ட்சை, செயன்முறைப் பரீட்சை என இரு பிரிவுகளாக நடாத்தப் பட்ட இப் பரிட்சையில் சித்தி பெற்றோர் விபரம் வருமாறு -

தரம் 'ஏ' பிரிவில் க.கனகராஜா, ப.பார்த்தீபன் ஆகியோரும் தரம் 'பி' பிரிவில் சி.வசந்தகுமார், பா.ஜெயகரன், பா.தணிகைவேல், ஐ.சசிக்குமார், ம.மதிவதனன், செ.சாள்ஸ் இன்பதாஸ், எஸ்.மனோன்மணி, வி.சி.வசிறி, பி.முகுந்தன், எஸ்.ஜசிந்தன் ஆகியோரும் தரம் 'சி' பிரிவில் ஆர்.யுகராஜ், ரி.ஜெயதீபன், ஐ.இந்துகான், எஸ்.தயானி, எம்.வினோகாந், எஸ்.செல்வரதன் ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான கௌரவிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கொழும்பு ஒலிம்பிக் மண்ட பத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு விளையாட்டுத்துறை அமைச்சர், இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி சில்வா சந்திரசேனா, உபதலைவி ஜெசா ராமச்சந்திர, பொருளாளர் டசன்ன தசநாயக்க, யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவி J.F.ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (12)

## தமிழ் - சிங்கள புத்தாண்டு விழா

(செம்பியன் பற்று)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் அமைந்துள்ள 551 ஆவது படைத்தலைமையகத்தினரால் நடாத்தப்பட்ட தமிழ் - சிங்கள புத்தாண்டு விழா செம்பின்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள், இராணுவத்தினர் கலந்து கொண்ட இந் நிகழ்வில், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் தலையணைச் சண்டை, கிறீஸ் கம்பம் ஏறுதல் கிடுகு இழைத்தல், சமநிலை ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல் கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் இடம் பெற்றன.

இவ் விழாவுக்கு 55 ஆவது சேனைத் தலைமை அலுவலக கட்டளை இடும் அதிகாரி பிரிக்கேடியர் கே.எல்.ஏ.எஸ் பெரேரா பிரதம விருந்தினராகவும்,

553 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி பிரிகேடியர் எஸ்.குலத்திலக, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (70)

## பணிப்பாளர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கங்களின் சம்மேளன பணிப்பாளர் சபைக் கூட்டம் இம்மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தலைவர் சி.தவரத்தினம் தலைமையில் சம்மேளனப் பணிமனையில் நடைபெறவிருக் கின்றது. (70)

## ஆதினியின் இன்றைய பலன்

(15.04.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 02

இராகுகாலம் 10.36 –12.04, சுபநேரம் 06.36 –7.34, துவாதசி பி.ப. 4.15, பூரம் 6.45, சித்தம், பிரதோஷ விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** உதவி செய்தல், உறவினர் வருகை, நண்பரால் உதவி.

**ரிஷபம்:–** நினைத்த காரியம்நிறைவேறல், பெரியோர் நட்பு, பொருள் விரயம்.

**மிதுனம் :–** யோசனை மிகுதி, கற்பனையால் துன்பம், மனக் கலக்கம்.

**கடகம்:–** திருடர் பயம், பகை மிகுதி, காரியம் கெடல்.

**சிம்மம்:–** நண்பரால் லாபம், திடீர் செய்தியால் குழப்பம், நினைத்தது நடக்கும்.

**கன்னி :–** நினைத்த காரியச் சித்தி, பணவரவு, குதூகலம்.

**துலாம் :–** தொழிலால் வருமானம், உறவினர் வருகை, பாராட்டப்படல்.

**விருச்சிகம்:–** மதிக்கப்படல், கொண்டாட்டம், பொருள் விரயம்.

**தனுசு:–** அதிக செலவு. மனக்குழப்பம், உறவினரால் கவலை.

**மகரம்:–** மதிக்கப்படல், பரிசு கிடைத்தல், கொண்டாட்டம்.

**கும்பம் :–** முயற்சி வெற்றி, பணச் சேர்க்கை, நண்பர் உதவி.

**மீனம்:–** ஊக்கமிகுதி, உற்சாகம், இனசனக் கொண்டாட்டம்.

## மரதன் ஓட்டப்போட்டி முடிவுகள்

வசந்தம் தொலைக்காட்சியின் அனு சரணையில் யாழ். மாவட்டச் செயலகமும், 52 ஆவது படைப்பிரிவும், 521 ஆவது படைப்பிரிவும் இணைந்து நேற்று முன்தினம் வடமராட்சியில் ஆண்கள், பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியை நடாத்தின.

ஆண்களுக்கான 20 மீற்றர் ஓட்டப் போட்டியில் தெல்லிப்பளையைச் சேர்ந்த கி.ஜெயந்தன் 1 ஆம் இடத்தையும், அதே இடத்தைச் சேர்ந்த எ.ஜெகதீஸ்வரன் 2 ஆம் இடத்தையும், பருத்தித்துறையைச் சேர்ந்த டயன்சர் 3 ஆம் இடத்தையும், 4 ஆம் இடத்தை ரஜீகரனும், 5 ஆம் இடத்தை காண்டீபனும், 6 ஆம் இடத்தை ஜெயநந்தனும், 7 ஆம் இடத்தை கமலும், 8 ஆம் இடத்தை ரஜீசங்கரும், 9 ஆம் இடத்தை கிருபாகரனும், 10 ஆம் இடத்தை பிரசாந்தும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான 9 கிலோ மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆர்.காவேரி (தெல்லிப்பளை) 2 ஆம் இடம் ம.தாரணி (சண்டிலிப்பாய்), 3 ஆம் இடம் அ.ரேணுகா (கச்சாய்), 4 ஆம் இடம் என்.சுமதி (சண்டிலிப்பாய்), 5 ஆம் இடம் என்.நவரஞ்சினி (கரவெட்டி), 6 ஆம் இடம் ப.ரஜீனா (பருத்தித்துறை), 7 ஆம் இடம் த.துலக்சிகா (தெல்லிப்பளை), 8 ஆம் இடம் டி.டினோசா (சண்டிலிப்பாய்), 9 ஆம் இடம் ஆர்.நளாயினி (பருத்தித்துறை) 10 ஆம் இடம் க.கேசனி (மருதங்கேணி). (12)

## பண்டிதர் வகுப்புகள்

(யாழ்.நிருபர்)

யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடாத்தும் பிரவேச பண்டிதர் பாலபண்டிதர் மற்றும் பண்டிதர் வகுப்புகள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. இவ் வகுப்புகளில் புதிதாக இணைய விரும்புவோர் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு வருகை தந்து தமது பதிவுகளை மேற்கொள்ளலாமென மேற்படி சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

# சிற்பத் தேர் வெள்ளோட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை தம்பாட்டி நுனிபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலயத்தின் சிற்பத் தேர் வெள்ளோட்ட விழா வெள்ளிக்கிழமை மதியம் 12.04 தொடகம் பி.ப.3.04 வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

மேற்படி சிற்பத் தேர் வடி வமைப்பினை யாழ்ப்பாணம் புத்தூர், ஸ்ரீ காளிகா சிற்பாலய சற்பத்தேர் நிர்மாணிப்பு ஸ்தபதி ராத கலாஞானி, சிற்ப கலா வித்தகர் செல்லையா பாலச்சந்திரன் அவர்களும் அவரது சிற்பக் குழுவினராலும் வடிவமைப்புச் செய்யப்பட்டது.

மேற்படி சிற்பத்தேர் வெள்ளோட்ட விழாவில் அருளாசியுரையினை நல்லை ஆதீன குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச் சாரிய சுவாமிகள் நிகழ்த்தவுள்ளதுடன், வாழ்த்துரைகளை யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ். பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் கலாநிதி நா.சண்முகலிங்கன், ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஆசியுரையினை ஆலய பிரதம குரு பிரதிஷ்டா சிரோன்மணி சிவஸ்ரீ நவரத்தின பிரபுதேவக் குருக்கள் நிகழ்த் துவதுடன் மேற்படி சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா ஆலய தேர்த்திருப்பணிச் சபைச் செயலாளர் க.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (27)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக்காலம் மீண்டும் நீடிக்கப்படலாமெனத் தகவல்



(கொழும்பு)

**கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பதவிக்காலம் மீண்டும் நீடிக்கப்படலாம் என ஆணைக்குழு தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. ஆறு மாத காலத்துக்குள் விசாரணைகளை முடித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார்.**

அந்தக்கால அவகாசம் முடிந்த நிலையில் பலரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆறுமாத காலத்துக்குப் பதவிக்காலத்தை நீடித்து இருந்தார். ஆணைக்குழுவின் பதவிக்காலம் அடுத்த மாதம் 15ஆம் திகதி முடிவடைகின்றது. அதற்கிடையில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் முக்கிய தலைவர்கள் சிலரின் சாட்சியங்கள் இதுவரை பதிவு செய்யாத காரணத்தால், ஆணைக்குழுவின் பதவிக்காலத்தை நீடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது என அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்தன. இதேவேளை ஆணைக்குழு பல்வேறு இடங்களில் பதிவு செய்த சாட்சியங்களை அறிக்கையாக்கும் பணி தற்சமயம் இடம்பெற்று வருகிறது. அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் அந்தப் பணி துரிதமாக நடைபெற்று வருகின்றது எனவும் ஆணைக் குழு தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

## 3மில்லியன் ஹெரோயின் கடத்திய பாகிஸ்தான் பிரஜை கைதானார்

(கொழும்பு)

3மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்திய பாகிஸ்தான் பிரஜை ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். மிகவும் நுட்பமான முறையில் 48 ஆணுறைகளில் இந்த ஹெரோயின் போதைப் பொருட்களை விழுங்கியிருந்ததாகத் ' தெரிவிக்கப்படுகிறது. கடந்த திங்கட்கிழமை குறித்த நபர் கொழும்பு கட்டுநாயக்க பண்டார நாயக்க விமான நிலையத்தின் மூலம் நாட்டுக்குள் பிரவேசித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. சுங்கப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து குறித்த நபர் தங்கியிருந்த ஹோட்டலை முற்றுகையிட்டு, சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 27 வயதான குறித்த சந்தேக நபர் அண்மையில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கட் போட்டித் தொடரின் போது இரண்டு தடவைகள் இலங் கைக்கு விஜயம் செய்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. குறித்த நபரின் வயிற்றிலிருந்து 547 கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது

## சக்திவாய்ந்த கிளைமோர் குண்டு வாழைச்சேனையில் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூக்கர்ரகல் அம்புஸ்குடா பிரதேசத்தில் இருந்து பதினைந்து (15) கிலோகிராம் மதிக்கத்தக்க கிளைமோர் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ.எம்.பி.ஜயவீர தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பிரதேசத்தை சோதனையிட்டபோது இக் கிளைமோர் குண்டு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இக் கிளைமோர் குண்டில் கப்டன் பவான் (ஜயா) 99, 15 கி.கி., தகர்ப்பு வெடிமருந்து, 2004,0054 என்று பொறிக்கப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட 54 ஆவது குண்டாக இது இருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஈ. எம். பி. ஜயவீர மேலும் தெரிவித்தார்.

# இராணுவத்துக்கான வாகனங்கள், கட்டங்கள் இந்தியா, சீனாவிடமிருந்து பெறப்படவுள்ளன

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவிடம் இருந்து கடன் அடிப்படையில் வாகனங்கள் வாங்கப்படவுள்ளன. அத்துடன் சீனாவிடம் இருந்து தயார்நிலைக் கட்டடங்களையும் இலங்கை இராணுவம் பெறவுள்ளது.

இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய சிங்கள-தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பகுதிகளில் உள்ள படையினரைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கை படையினர் மத்தியில் உரையாற்றிய அவர்,

ஒவ்வொரு படைவீரருக்கும் தொழில்சார் இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் அவர்கள் இராணுவ சேவையில் இருந்து விலகிச் சென்ற பின்னர் இன்னொரு பணியில் அமர்வதற்கான ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

தற்காலிக படைமுகாம்களுக்குப் பதிலாக நிரந்தர படைமுகாம்களை நிறுவும் தேசிய கொள்கையை இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

நாடு முழுவதும் நிரந்தரப் படைத்தளங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதற்காக அரசாங்கம் 984 தயார்நிலைக் கட்டடங்களைச் சீனாவிடம் இருந்து பெற்றுத் தந்துள்ளது.


மேலும் 1542 தயார்நிலைக் கட்டடங்களை சீனாவிடம் இருந்து அரசாங்கம் இராணுவத்துக்குப் பெற்றுத் தரவுள்ளது.

முழு இராணுவத்தையும் ஒரே வலைப்பின்னல் ஊடாக இணைக்கும் திட்டம் வேகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் நிர்வாகப் பணிகளைச் சுலபமாக்க முடியும்.

ஆயுதங்கள் வெடிபொருட்களுக்காகச் செலவிட்ட பெருந்தொகைப் பணத்தை இப்போது நாம் மீதப்படுத்தியுள்ளோம். இதன்மூலம் சேமிக்கப்பட்ட பணத்தை படையினரின் நலன்களுக்குப் பயன்படுத்த முடியும்.

இந்தியாவில் இருந்து இராணுவத்துக்கு வாகனங்கள் விரைவில் இறக்குமதி செய்யப்படவுள்ளது. இதன்பின்னர் தற்போது வாகனங்களுக்காக இராணுவம் வாடகையாகச் செலுத்தும் கணிசமான பணத்தைச் சேமிக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, இந்தியாவிடம் இருந்து கடன் அடிப்படையில் இலங்கை



இராணுவத்துக்கு வாகனங்கள் வாங்கப்படவுள்ளதாகவும், இதற்கான நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இலங்கை இராணுவப் பேச்சாளர் உறுதி செய்துள்ளார்.

## அதிரடிப்படையினர் எனத்தெரிவித்து தொலைபேசி அபகரித்தவர் பிடிபட்டார்

(மட்டக்களப்பு)

விசேட அதிரடிப்படையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி இளைஞர்களைப் பயமுறுத்தி அவர்களின் தேசிய அடையாள அட்டைகள், கையடக்கத் தொலைபேசிகளை பறித்துச் சென்ற ஒருவரை கைது செய்துள்ளதாக கல்முனை பொலிசார் தெரிவித்தனர்.

கல்முனை கடற்கரைப் பிரதேசத்தில் பொழுதுபோக்குக்காக செல்லும் இளைஞர்களிடம் மூன்று பேர் கொண்ட குழுவினர் தாங்கள், விசேடஅதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி இளைஞர்களைப் பயமுறுத்தி அவர்களின் தேசிய அடையாள அட்டைகள், கையடக்கத் தொலைபேசிகள் இரண்டையும் பறித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக அருகிலிருந்த விசேடஅதிரடிப்படை முகாமில் குறித்த அடையாள அட்டைகளைப் பறிகொடுத்த இளைஞர்களால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனை அடுத்து கடந்த திங்கட்கிழமை இரவு கல்முனை உடையார் வீதியைச் சேர்ந்த பன்னீர்ச்செல்வம் வெண்ணிலவன் (27) என்ற இளைஞன் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு கல்முனைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவரிடமிருந்து, எடுத்துச் செல்லப்பட்ட தேசிய அடையாள அட்டைகள், கையடக்கத் தொலைபேசிகள் என்பன மீட்கப்பட்டன.

இதேவேளை, இந்த பறிப்புச் சம்பவத்தில் இவருடன் இணைந்து செயல்பட்ட மற்றைய இருவரும் தலைமறைவாகியுள்ளனர்.

இவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன இது தொடர்பானதாகவும் விசாரணைகளை மேற்கொள்ளும் கல்முனைப் பொலிசார் தெரிவித்தனர்.

# 96 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடு வவுனியா மாவட்டத்தில் பதிவு

(கொழும்பு)

கடந்த ஆண்டு வவுனியா மாவட்டத்தில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பான 96 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாக வவுனியா மாவட்ட சிறுவர் அதிகாரசபை அலுவலகம் தெரிவித்துள்ளது. இவ்வாறான முறைப்பாடுகளில் 75 முறைப்பாடுகளுக்கு அதிகாரசபையின் அதிகாரிகளினால் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் இச்சம்பவங்களில் 11வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்டவர்களே அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் 19 ஆண்களும் 77 பெண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பாலியல் ரீதியாகப் பாதிக்கப்பட்ட 43பேர் 6வயதிற்கும் 10 வயதிற்கும் உட்பட்ட சிறுவர்கள் எனவும் 10 பேர் 16 வயதிற்கும் 18வயதிற்கும் உட்பட்ட பிள்ளைகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 11சிறுவர்கள் கடந்த ஜனவரி மாதம் பாதிப்புக்குள்ளானதாகவும் அப்பாதிப்புக்கு உறவுமுறையினரே காரணமாக இருந்துள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு ஆணும் பதினான்கு பெண்களுமாக 15 சிறுவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாகவும் இவர்களில் 13 பேர் பதினைந்து வயதிற்குட்பட்ட சிறுவர்கள் எனவும் மிகுதி இருவரும் 16 முதல் 18 வயதிற்கிடைப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 17 பேர் உடல் தாக்கத்திற்குட்பட்டதாகவும் (14 ஆண்கள் 3 பெண்கள்) இவர்களில் 5 வயது நிரம்பிய ஒரு சிறுவன் உட்பட மிகுதிப் பேர் 11 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தாண்டு 11 வயதிற்கும் 15 வயதிற்குமிடைப்பட்ட இரு ஆண்கள் ஒரு பெண் உட்பட மூவர் காணாமல் போயிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேவேளை 11 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட இரு ஆண்களும் ஒரு பெண்ணும் பராமரிக்க ஆட்களின்றி இருப்பதாகவும் தமக்கு முறைப்பாடாகியுள்ளதாக சிறுவர் அதிகார சபை அறிவித்துள்ளது.

அத்துடன் சிறுவயது திருமணத்தின் மூலம் இரு பெண்சிறுமிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் 11 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட ஒரு சிறுமி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சிறுவர் அதிகாரசபையின் வவுனியா மாவட்ட புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன. அதேவேளை இவ்வாண்டின் முதற்பகுதியில் நான்கு சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாகவும் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

அதேநேரம் இவ்வாறான துஷ்பிரயோக செயற்பாடுகள் தொடர்பில் தமக்கு முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என்பதுடன், அவ்வாறு அறியத் தரும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளதாகவும் மக்களின் பங்களிப்பின் மூலமே சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க முடியுமெனவும் அதன் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

1929 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியுமெனவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார்.

# கடந்த வருட சிறந்த கிரிக்கெட் வீரராக சச்சினைத் தெரிவு செய்தது விஸ்டன்

## முதன்முறையாகக் கௌரவம்



(லண்டன்)

கிரிக்கெட்டின் பைபிளாக கருதப்படும் விஸ்டன் பத்திரிகை 2010ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரை தேர்வு செய்துள்ளது.

இந்த விருதை சச்சின் பெறுவது இதுவே முதல்முறை. இந்தியாவின் சேவாக், அவுஸ்ரேலியாவின் ரிக்கி பொண்டிங், ஷேன் வோர்ன், இங்கிலாந்தின் பிளிண்ரொப், இலங்கையின் முரளிதரன், தென்னாபிரிக்காவின் ஜக்ஸ் கலிஸ் ஆகியோருக்கு அடுத்தபடியாக இந்த விருதைப் பெறும் 7ஆவது வீரர் சச்சின் என்பது குறிப்பிடத்தக்கது.

விஸ்டனின் 148ஆவது பதிப்பு நேற்று முன்தினம் வெளியானது. விஸ்டன் விருது 2004 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த விருது முன்னதாகவே தொடங்கப்பட்டிருந்தால் 1998 ஆம் ஆண்டே விஸ்டன் விருதை சச்சின் பெற்றிருப்பார் என 2007இல் விஸ்டன் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

37 வயதாகும் டெண்டுல்கர், 2010ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டியில் 7 சதங்களுடன் 1,500 ரன்களை விளாசினார். டெஸ்ட் போட்டியில் 50ஆவது சதத்தையும் அடித்து சாதனை படைத்தார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இரட்டைச் சதம் அடித்ததன் மூலம், ஒருநாள் போட்டியில் இந்தச் சாதனையை எட்டிய முதல் வீரர் என்ற பெருமையையும் பெற்றார் சச்சின்.

விஸ்டனின் 2009ஆம் ஆண்டுக்கான உலக டெஸ்ட் அணியிலும் சச்சின் டெண்டுல்கர் இடம்பெற்றுள்ளார். சச்சினுக்கு 4 ஆவது இடம வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் சேவாக்-பங்களாதேஷின் தமிம் இக்பால் ஆகியோர் டெஸ்ட் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய வீரர்கள் டோனி, வி.வி.எஸ்.லக்ஸ்மன், சகீர்கான் ஆகியோர் உலக டெஸ்ட் லெவன் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இலங்கையின் சங்ககார, தென்னாபிரிக்காவின் கலிஸ், ஸ்ரெயின், இங்கிலாந்தின் அண்டர்சன், கிரீம் ஸ்வான் ஆகியோரும் இதில் இடம் பெற்றுள்ளனர்.

அவுஸ்ரேலிய வீரர்கள் யாரும் இதில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# மேற்கிந்திய அணியிலிருந்து 3 சிரேஷ்ட வீரர்கள் நீக்கம்



(பிரிட்ஜ்டவுன்)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்து ஒரு 20 ஓவர் போட்டி, 5 ஒரு நாள் போட்டி மற்றும் 2 டெஸ்டில் விளையாடுகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி இரு அணிகள் இடையேயான தொடர் தொடங்குகிறது. இதில் முதல் 2 ஒருநாள் போட்டியில் விளையாடும் மேற்கிந்தியத் தீவு அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண அணியில் இடம் பெற்ற சிரேஷ்ட வீரர்களான முன்னாள் கப்டன் கிறிஸ் கெய்ல், சர்வான், சந்தர்போல் ஆகியோர் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். வெய்ன் பிராவோ துணைக் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் போலார்ட் (மும்பை இந்தியன்ஸ்), பிராவோ (சென்னை) ஆகியோர் தேசிய போட்டியில் ஆடவேண்டிய நிலை உள்ளது. இதனால் அவர்கள் இடைநடுவில் நாடு திரும்பவுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் 2 ஒருநாள் போட்டியில் விளையாடும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர்கள் வருமாறு:- டரன் சமி (கப்டன்), வெய்ன் பிராவோ (துணைக் கப்டன்), சாமுவேல்ஸ், லெண்டில் சிம்மனஸ், தேவன் சுமித், தேவன் தோமஸ், தேவேந்திர பிஷசு, எட்வேர்ட்ஸ், மார்ட்டின், ராம்போல், கெமர் ரோச், ரசல்.

# இந்த வருட இறுதியில் இடம்பெற இருந்த இலங்கை-பாகிஸ்தான் போட்டிகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாகிஸ்தானில் பிரிமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை ஆரம்பித்தல் மற்றும் இவ்வருட இறுதியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரொன்றை நடத்துதல் ஆகியன பாதுகாப்பு நிலைமை காரணமாக தடங்கலுக்குள்ளாகியுள்ளது.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, பாகிஸ்தானுக்கு விஜயம் செய்து 20 ஓவர் பிரியமிர் லீக் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு இலங்கை வீரர்கள் தயங்குவது தெளிவானதாக, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் உறுதிப்படுத்தினர் என இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை பாகிஸ்தானில் நடத்தத் திட்டமிட்டுள்ள இரு தரப்பு போட்டிகளை துபாய், அபுதாபி போன்ற நடுநிலை இடமொன்றில் நடத்துவதை தாம் விரும்புவதாகவும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர் என மேற்படி பாகிஸ்தான் அதிகாரி கூறியுள்ளார்.

எனினும் ஒருசில மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளிலாவது பாகிஸ்தானில் இலங்கை விளையாடும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நம்புகிறது. டெஸ்ட் போட்டிகள் உட்பட ஏனைய போட்டிகளை துபாய், அபுதாபி போன்ற இடங்களில் நடத்தலாம் என அச்சபை எதிர்பார்க்கிறது.

# இலங்கை அணி வீரர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுலாவுக்குத் தெரிவு செய்யப்படும் வீரர்கள், பயிற்சிகளின்போது ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து திரும்பி வராவிட்டால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை அணி வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளைவிட தேசிய அணிக்கு முக்கியத்தும் அளிக்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்தகமகே கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் இலங்கை அணியின் பயிற்சிகளுக்கு இடையூறு இல்லாத வகையிலேயே வெளிநாட்டு சுற்றுப்போட்டிகளில் பங்குபற்ற இலங்கை அணி வீரர்கள் அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் கூறினார்.

குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்த்தன உட்பட இலங்கை அணியின் 11 வீரர்கள் ஐ.பி.எல். போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர்.

இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுலா அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஐ.பி.எல்.சுற்றுப் போட்டி மே 28 ஆம் திகதி முடிவடையவுள்ளது.

# துடுப்பாட்டம் மேம்பட வேண்டும்

(புதுடில்லி)

ஷேவாக் தலைமையிலான டெல்லி டேர்டெவிலஸ் அணி கடந்த செவ்வாய்க்கிழமை ராஜஸ்தான் றோயல்சிடம் 6 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றது. டில்லி அணி தான் மோதிய 2 ஆட்டத்திலும் தோற்றது. முதல் போட்டியில் மும்பை இந்தியன்சிடம் தோற்றது. இந்தத் தோல்வி குறித்து ஷேவாக் கூறியதாவது:-

நான் உட்பட முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் எவரும் சரியாக விளையாடவில்லை. வேணுகோபால் ராவும், வார்னரும் நன்றாக துடுப்பாட்டம் செய்தனர். 151 ரன் என்பது போதுமான ஸ்கோர்தான். ஆனால் ராஜஸ்தான் அணி ஆட்டம் சிறப்பாக இருந்தது. எங்களது பந்துவீச்சுச் சிறப்பாக உள்ளது. ஆனால் துடுப்பாட்டத்தில்தான் இன்னும் அதிகமான கவனம் தேவை. இனிவரும் ஆட்டங்களில் நான் சிறப்பாக ஆடுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

வெற்றி குறித்து ராஜஸ்தான் கப்டன் வோர்ன் கூறும்போது, எங்களது ஆட்டம் சிறப்பாக இருநதது. 2ஆவது ஆட்டத்திலும் வெற்றி பெற்றது மகிழ்ச்சி அளிக்கிறது எனத் தெரிவித்தார்.

# ருவென்ரி -20 போட்டித் தொடரை தனதாக்கியது சென்.பற்றிக்ஸ்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட ரி-20 போட்டித் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை யாழ்.பற்றிக்ஸ் கல்லூரி அணி சுவீகரித்துக்கொண்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்தையே சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும், வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதிக்கொண்டன.

முதலில் ஆடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 195 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரியூடர் 55 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து சிக்ஸர்கள், [illegible] பவுண்டரிகள் அடங்கலாக 97 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரிய லக்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 196 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி அணி, 16.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சீராளன் 21 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் நோபோட் நான்கு, அஜித் டர்வின் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இப்போட்டியின் ஆட்டநாயகனாக ரியூடர் தெரிவானார்.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இப்போட்டி நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (20)

# ஏமனில் மீண்டும் ஏற்பட்டது கலவரம் இராணுவம் சுட்டதில் ஐவர் உயிரிழப்பு

(சனா)

துனுசியா, எகிப்து நாடுகளில் நடந்த பொதுமக்கள் போராட்டத்தால் அந்த நாட்டு அதிபர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து அரபு நாடான ஏமன் நாட்டிலும் அதிபருக்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். 32 ஆண்டுகளாகத் தொடர்ந்து பதவியில் இருக்கும் அதிபர் அலி அப்துல்லா சலே பதவி விலக வேண்டுமென நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

அவர்கள் மீது அதிபர், ராணுவம் மற்றும் பொலிஸாரை ஏவி விட்டு அடக்க முயன்றார். இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

பின்னர் போராட்டம் கட்டுக்குள் வந்தது. இந்தநிலையில் கடந்த ஒரு வாரமாக மக்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



ஏமன் நாட்டில் உள்ள ஏமன் நகரில் பல்லாயிரக் கணக்கானோர் திரண்டு வந்து அதிபருக்கு எதிராகப் போராடம் நடத்தினார்கள். அவர்களைக் கலைந்து செல்லுமாறு ராணுவம் எச்சரித்தது. ஆனால் பொதுமக்கள் மறுத்தனர். அப்போது ராணுவத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ராணுவம் பொதுமக்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டது.

இதில் ஐவர் உயிர் இழந்ததுடன், 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்து நாட்டின் பல பகுதிகளிலும் கலவரம் பரவியுள்ளது.

இதற்கிடையே ராணுவப் படையிலேயே பிளவு ஏற்பட்டுள்ளது. ஒரு தரப்பினர் பொது மக்களுக்கு ஆதரவாக மாறி உள்ளதுடன் இன்னொரு தரப்பினர் அரசுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் ஏமனில் மூண்டுள்ள கலவரம் மேலும் அச்சமடையத்தக்க வகையில் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

# முபாரக் மருத்துவமனையில்

(மொஸ்கோ)



எகிப்தின் முன்னாள் அதிபர் ஹொஸ்னி முபாரக் ஷார்ம் எல்-ஷெய்க்கில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாக அல்-ஜசீரா தொலைக்காட்சி தெரிவித்தது.

முபாரக் அவரது அரசுக்கு எதிராக எழுந்த கிளர்ச்சியை அடுத்து கடந்த மாதம் ஆட்சியை ராணுவத்திடம் ஒப்படைத்து விட்டு பதவி விலகினார். அப்போதுமுதல் ஷார்ம் எல்-ஷெய்க் பகுதியில் உள்ள தனது இல்லத்தில் வசித்து வருகிறார்.

முபாரக்கும், அவரது குடும்பத்தினரும் எகிப்தை விட்டு வெளியேற தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பாக நேற்று அவரிடம் விசாரணை நடத்தப்பட்டதாகவும், அப்போது அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தொலைக்காட்சித் தகவல்கள் தெரிவித்தன.

# நேற்றும் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த மாதம் ஏற்பட்ட நில நடுக்கத்துக்கு பிறகு அடிக்கடி நில நடுக்கம் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில் இன்று அதிகாலையிலும் நில நடுக்கம் ஏற்பட்டது.

அங்குள்ள ஹோன்சு தீவு மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் நில நடுக்கம் உணரப்பட்டது. ரிக்டர் ஸ்கேல் அளவுக்கு 6.1 புள்ளிகளாக பதிவாகி இருந்தது. இதனால் பாதிப்பு ஏற்பட்டதாக இதுவரை தகவல் இல்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்படவில்லை.

# பங்களாதேஷில் ஏற்பட்ட பறவைக்காய்ச்சல் கோழிகள் பெருமளவில் அழிக்கப்பட்டன



(டாக்கா)

பங்காளாதேஷில் உள்ள கஜாரி பகுதியில் திடீரென கோழிகள் செத்து விழுந்தன. எனவே அவற்றைப் பரிசோதனைக்கு எடுத்துச் சென்றனர்.

அதில் கோழிகளைப் பறவைக் காய்ச்சல் தாக்கி இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து அந்தப் பகுதியிலுள்ள அனைத்து கோழிப் பண்ணைகளிலும் சோதனை நடத்தினார்கள். அதில் மேலும் பல கோழிகளையும் பறவைக்காய்ச்சல் தாக்கி இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து கோழிப் பண்ணைகளில் இருந்த அனைத்துக் கோழிகளும் அழிக்கப்பட்டதுடன், 4298 முட்டைகளையும் அழித்தனர். அந்தப் பகுதி முழுவதும் தடுப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டுள்ளன. இந்த மாவட்டத்திலிருந்து கோழிகளை வெளிப்பகுதிகளுக்கு கொணடு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. 2 ஆண்டுகளுக்கு முன்பு பங்காள தேஷில் பரவிய பறவைக்காய்ச்சல், அசாம் மாநிலத்தில் பரவி இந்தியா முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தியது. எனவே இப் போது பங்காளதேஷில் ஏற்பட்ட பறவைக்காய்ச்சலும் இந்தியாவில் பரவ வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




# அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக புனிதப்போரை அறிவித்த லஷ்கர் இ.தொய்பா



(வொஷிங்டன்)

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராக லஷ்கர் -இ- தொய்பா புனிதப் போரை அறிவித்துள்ளதாக அமெரிக்கத் தளபதி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க செனட் சபையில் இது குறித்து அமெரிக்கத் தளபதி றொபேர்ட் விலார்ட் குறிப்பிடுகையில் -

இந்தியாவுக்கு எதிராக செயற்பட்டு வந்த லஷ்கர் -இ- தொய்பா பயங்கரவாதிகள், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர்.

இவர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு எதிராகப் புனிதப் போரை அறிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் மண்ணில் வளர்ந்த இந்தப் பயங்கரவாதிகளை ஒழிக்க, அந்நாட்டு அரசு இன்னும் தெளிவான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் லஷ்கர் பயங்கரவாதிகளை ஒடுக்க, அந்நாட்டு அரசுகளுடன் அமெரிக்கா தொடர்ந்தும் தொடர்புகளை மேற்கொண்டு வருகிறது என மேலும் அவர் தெரிவித்தார்.

# ஜப்பானில் சுனாமி ஏற்பட்டு ஒரு மாதத்தின்பின்னர் இடிபாடுகளுக்குள்ளிருந்து மீட்கப்பட்ட முதியவர்

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த மாதம் 11 ஆம்தேதி சுனாமி தாக்கி பேரழிவு ஏற்பட்டது. அங்குள்ள புகுஷிமா பகுதியில் பண்ணை வீட்டில் வசித்து வந்தவர் குனியோ ஷிகா (வயது 75). இவருடன் மனைவியும் அந்த வீட்டில் வசித்து வந்தார். சுனாமி தாக்குதலில் இவரது பண்ணை வீடும் சிக்கிக்கொண்டது. அதில் வீடு இடிந்தது. அத்துடன் சுனாமியால் அடித்து வரப்பட்ட மரங்கள் மற்றும் பொருட்கள் இந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டன.

இதில் அவரது வீடு அமைந்த பகுதி முழுவதும் குப்பை மேடு போல மாறிவிட்டது. சுனாமி வெள்ளம் அவரது மனைவியை அடித்துச் சென்று விட்டது. குனியோ ஷிகா மட்டும் இடிபாட்டுக்குள் சிக்கிக்கொண்டார். ஆனாலும், அவர் உடலில் காயம் ஏதும் ஏற்படவில்லை. வீட்டுக்குள் நடமாடும் அளவுக்கு இடம் இருந்தது. ஆனால் அங்கிருந்து வெளியே வர முடியாத அளவுக்கு இடிபாடுகளாகக் கிடந்தன.

எனவே, இடிபாட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார். வீட்டில் ஏற்கனவே சேமித்து வைத்திருந்த உணவுகளைச் சாப்பிட்டார். ஒரு மாதம் கழித்து அந்த இடத்தில் கிடந்த இடிபாடுகளை மீட்புப் படையினர் அகற்றினர். அப்போதுதான்



குனியோஷிகா உயிரோடு இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. அவரை மீட்டு வெளியே கொணடு வந்தனர். இவரது வீடு அருகேதான் சுனாமியால் பாதிக்கப்பட்ட அணுமின் நிலையம் இருந்தது. அங்கு கதிர்வீச்சு ஏற்பட்டதை அடுத்து 20 கிலோ மீற்றர் சுற்றளவில் வசித்த அனைத்து மக்களும் வெளியேற்றப்பட்டனர். எனவே இந்தப் பகுதியில் ஆள் நடமாட்டமே இல்லாமல் இருந்தது. மீட்புப் படையினர் அந்தப் பகுதிக்குச் செல்லவில்லை. ஒரு மாதம் கழித்து மீட்புப் பணி நடந்ததால் இத்தனை நாட்களும் அவர் இடிபாட்டுக்குள்ளேயே சிக்கி இருந்துள்ளார்.

# எது நீதி? எது நியாயம்?




தமிழ்ப்புத்தாண்டு மலர்ந்திருக்கின்றது. வருடா வருடம் இப்படிப் புது ஆண்டு பிறந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் தமிழ் மக்கள் வாழ்வில் புதிதாக ஏதும் நடந்து விடவில்லை. காரணம் என்ன? உண்மையான கடவுள் பக்தியும், பெரியோரைக் கனம் பண்ணுவதும், பெற்றோரை மதிப்பதும் குருவை மதிப்பதும் குறைந்து போனதே காரணம்.

ஏ மனிதா! கொஞ்சம் சிந்தித்துப் பார்!

மனிதன் முதலில் மனிதனாக வாழப்பழக வேண்டும். மனித உருவிலிருந்து கொண்டு மிருகம் போல வாழ்தல் கூடாது. மனிதனை மனிதன் மதிக்க வேண்டும்.

உனது காலில் ஒரு முள் குத்தியவுடன் 'ஓ' வென்று கத்தி உரத்துச் சத்தமிட்டு அழுகின்ற நீ, மற்றவர்களுக்கும் அப்படித் தானே இருக்கும் ஏ்னபதை ஏன் ஏற்க மறுக்கின்றாய்? உனக்கு ஒரு நியாயம், மற்றவர்களுக்கு இன்னொரு நியாயமா?

இது எந்த வகையில் சரியானது? எங்களைப் போலவே மற்றவர்களையும் நினைக்க வேண்டும். எமது வயிற்றில் பசி வந்தால் அது பசி, மற்றவர்கள் வயிற்றில் வந்தால் வேடிக்கையா? இந்த நிலைமை மாறவேண்டும். எல்லோரையும் சமமாக எண்ணும் நிலை உருவாக வேண்டும். அப்போது தான் எமக்கு விடிவு? அதர்மம் மடியவேண்டும், தர்மம் ஓங்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போய் வழிபாடு செய்ய முடியாதவர்கள் செவ்வாய், வெள்ளியிலாவது கோயிலுக்குப் போகவேண்டும். அதுவும் சைவசமயத்தை அனுட்டிக்கின்ற ஒருவரை நாம்கடவுளாக மதிப்புக் கொடுத்து நடக்க வேண்டும். அப்போது தான் சைவ சமயத்துக்கு விடிவு காலம்.

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# தமிழக சட்டசபைத் தேர்தலில் 77 வீதமானோர் வாக்களிப்பு

## தேர்தல் ஆணையர் பிரவீன்குமார்



தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் மாநிலம் முழுவதும் 77.4 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன என்று தமிழக தேர்தல் ஆணையர் பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், அதிகபட்சமாக கரூரில் 86 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

குறைந்த பட்சமாக குமரி மாவட்டத்தில் 68.1 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. தி.மு.க தலைவர் கலைஞர் போட்டியிடும் திருவாரூர் தொகுதியில் 75 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதா போட்டியிடும் ஸ்ரீரங்கம் தொகுதியில் 80 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

அதிகபட்சமாக கரூர் மாவட்டத்தில் 86 சதவீதம் வாக்குகள் பதிவாகி உள்ளன. குறைந்தபட்சமாக தூத்துக்குடி மாவட்டத்தில் 74 சதவீதம் வாக்குகள் பதிவாகி இருக்கின்றன. இதர மாவட்டங்களில் வாக்குப்பதிவு சதவீதம் இந்த சதவீதத்திற்கு இடைப்பட்டதாக உள்ளது.

கடந்த சட்டசபைத் தேர்தலில் 70.22 சதவீதமும், நாடாளுமன்ற தேர்தலில் 73 சதவீதமும் வாக்குகள் பதிவாகின. இந்தத் தேர்தலில் அதைவிட வாக்குப்பதிவு சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தத் தேர்தலில் சென்னையில் ஏராளமான இளைஞர்கள், நடுதர மற்றும் வசதி படைத்தவர்களும் அதிக எண்ணிக்கையில் வந்து வாக்களித்துள்ளனர். இதற்கு தேசிய வாக்காளர் தினம் கொண்டாடியது மட்டுமல்லாமல் தேர்தல் ஆணையம் நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் காரணம்.

இதனால், வாக்காளர்களிடம் வாக்களிக்கும் ஆர்வம் அதிகரித்துள்ளது.


வாக்குப்பதிவில் பெரிய அளவில் பிரச்சினைகள் ஒன்றும் இல்லை. 65 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுதடைந்தன. அவற்றில் 11 எந்திரங்கள் உடனடி சரி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. எஞ்சிய 54 இயந்திரங்கள் மாற்றப்பட்டன.

இந்தத் தேர்தலையொட்டி நடத்தப்பட்ட வாகன சோதனைகளில் ரொக்கப்பணம் மற்றும் பரிசுபொருட்களின் மதிப்பு ரூபா 45 கோடி ஆகும். இதில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்தவர்களுக்கு ரூபா 5 கோடி திருப்பி கொடுக்கப்பட்டு விடடது.

மீதமுள்ள பணத்தில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாவிட்டால் அந்தத் தொகை தேசிய கருவூலத்திற்கு அனுப்பப்படும். வாக்காளர்களுக்கு பணம் விநியோகம் செய்தது தொடர்பாக 1,565 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 53 பேர் கைதுசெய்யப்பட்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் மட்டும் தேர்தல் ஆணையம் கடுமையாக நடந்துகொண்டது என்று புகார் சொல்கிறார்கள். இந்தியா முழுமைக்கும் ஒரே தேர்தல் விதி முறைதான். தமிழகத்திற்கென்று தனியாக விதிமுறைகள் வகுக்கப்படவில்லை என்றார்.

# வாக்களிப்பு நிலையத்திற்குள் அலைக்கழிக்கப்பட்ட ரஜனி



(சென்னை)

தமிழக தேர்தல் தினமான நேற்று முன்தினம் வாக்களிக்கச் சென்ற நடிகர் ரஜினி காந்த் வாக்களிப்பு நிலையத்திற்குள் அலைக் கழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடிகர் ரஜினிகாந்த் நேற்றுமுன்தினம் பகல் 10.45 மணிக்கு ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி வாகுச் சாவடிக்கு காரில் வந்தார். அந்த கல்லூரி வளாகத்தில் வேறு, வேறு இடங்களில் 3 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 167, 168, 169 ஆகிய எண் கொண்ட அந்த மூன்று வாக்குச்சாவடிகளும் பொது வாக்குச்சாவடிகளாகும்.

நடிகர் ரஜினி வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடி 169 ஆவது எண் வாக்குச்சாவடியாகும். இது ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி வாசல் பகுதியில் இருந்தது.

ரஜினியின் காரும் மிகச்சரியாக அந்த வாக்குச்சாவடி அருகில் வந்து நின்றது. கருப்பு பேண்ட், நீலக் கலர் சட்டை, கூலிங் கிளாஸ் அணிந்து வந்திருந்த ரஜினி அந்த ஓட்டுச் சாவடிக்குள் செல்ல முயன்றபோது திடீரென அவரை, அவருடன் வந்தவர்கள் வேறு பகுதிக்கு அழைத்துச் சென்று விட்டனர்.

கல்லூரிக்குள் நுழைந்து விட்ட ரஜினி அங்கு வாக்குச் சாவடி இல்லாததால் திரும்பினார். இதையடுத்து அவரை 167-வது வாக்குச்சாவடிக்கு அழைத்து சென்றனர். அங்கிருந்த தேர்தல் அதிகாரிகள், உங்கள் பெயர் 169 ஆவது வாக்குச்சாவடியில் உள்ளது. அது எதிர்புறம் உள்ளது. அங்கு செல்லுங்கள் என்றனர்.

இதையடுத்து, ரஜினி அங்கிருந்து நடந்தே 169 ஆவது வாக்குச்சாவடிக்கு வந்தார். அலைக்கழிக்கப்பட்ட அவர் விறுவிறுவென உள்ளே சென்றார். ரஜினி வாக்குப்போடுவதை படம் பிடிக்க தொலைக் காட்சி, பத்திரிகை போட்டோகிராபர்கள் நூற்றுக்கும் மேல் திரண்டிருந்தனர். இதனால் ரஜினி சற்று சிரமத்துக்குள்ளானார். மின்னல் வேகத்தில் வாக்களித்த அவர் அதே வேகத்தில் புறப்பட்டார்.

# காங்கிரஸிலிருந்து எஸ்.வி.சேகர் நீக்கம்

கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக, மயிலாப்பூர் எம்எல்ஏ எஸ்.வி.சேகர் உட்பட 19 பேரை கட்சியில் இருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் தங்கபாலு நீக்கியுள்ளார்.

இதுதொடர்பாக தங்கபாலு வெளியிட்டுள்ள அறிக்கையில், சென்னை மாநகராட்சி முன்னாள் துணை மேயர் கராத்தே தியாகராஜன், மயிலாப்பூர் எம்.எல்.ஏ எஸ்.வி. சேகர், தென்சென்னை மாவடட காங்கிரஸ் தலைவர் மங்கள் ராஜ், தென்சென்னை இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஜேம்ஸ் ஜி.பிரகாஷ், சென்னை மாநகராட்சி கவுன்சிலர்கள் சாந்தி, செங்கை செல்லப்பன், விஜயசேகர் உட்பட மொத்தம் 19 பேர் நீக்கப்பட்டுள்ளதாக தங்கபாலு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அதிகார பூர்வ காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராக செயற்பட்டதாக, தங்கபாலு கூறியுள்ளார்.



இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள எஸ்.வி.சேகர், என்னை கட்சியில் இருந்து நீக்க தங்கபாலுவுக்கு அதிகாரம் இல்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ஒப்புதலைப் பெறாமல் தங்கபாலு, தன்னிச்சையாக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

தனக்கு எதிராகக் கட்சியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை நீக்கவேண்டும் என்ற எண்ணத்தில் தங்கபாலு செயற்பட்டுள்ளார். தங்கபாலு நடவடிக்கை குறித்து ராகுல் காந்திக்கு இமெயில் அனுப்ப உள்ளேன் என்றார்.

# இன்று நள்ளிரவு முதல் மீன்பிடிப்பதற்கு தடை

(சென்னை)

மீன்களின் இனப்பெருக்க காலம் என்பதால், கடலில் மீன் பிடிக்க 45 நாட்கள் தடைக்காலம் நள்ளிரவு முதல் தொடங்குகிறது. இதனால், தமிழகத்தில் 10 ஆயிரம் விசைப் படகுகள் கடலுக்கு செல்லாது.

மீன்கள் இனப்பெருக்கத்திற்கு சாதகமான காலம் என்று ஏப்ரல், மே மாதங்களை கடல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்த நாட்களில் மீன்கள் ஆழ்கடலில் முட்டையிட்டு, குஞ்சு பொரித்து இனவிருத்தி செய்யும்.

எனவே, கடலில் மீன் வளத்தை பெருக்கும் நோக்கத்தில், கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பு இருந்து தமிழகம் மற்றும் புதுச்சேரி கடல் பகுதியில் 45 நாட்கள் மீன் பிடிக்க தடை விதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்களில், ஆழ்கடல்ல் சென்று மீன் பிடிக்கும் விசைப் படகுகளுக்கு அனுமதி கிடையாது. ஆனால், கரையில் இருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று மீன் பிடிக்கும் கட்டுமரம் மற்றும் பைபர் படகுகளுக்கு அனுமதியுண்டு.

இதனால், தடை காலமான 45 நாட்களும் விசைப்படகுகள் அனைத்தும் கடற்கரையில் ஓய்வெடுக்கும். இந்த ஆண்டு மீன்பிடித் தடைக்காலம் இன்று நள்ளிரவு முதல் தொடங்குகிறது. அதனைத் தொடர்ந்து, வாரக்கணக்கில் கடலுக்குள் மீன்பிடிக்கும் விசைப் படகுகள் கரைக்கு திரும்பி வருகின்றன.

தமிழகம் முழுவதிலுமிருந்து 10 ஆயிரம் விசைப் படகுகள் கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லாது. சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத் தில் மட்டும் சுமார் ஆயிரம் விசை படகுகள் கரையில் ஓய்வு எடுக்கும் ஆனால், கடலில் 30 கிலோ மீற்றர் வரை சென்று கட்டுமரம் மற்றும் பைபர் படகு கள் மூலம் மீன் பிடிக்க அனுமதி உண்டு. மீன்பிடி தடை காலத்தில் குறைந்த அளவு மீன்களே பிடிக்கப்படுவதால், தமிழக மீன் தேவைக்கு கர்நாடகா, மகாராஷ் டிரா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளன. இதனால் மீன் விலை உயர வாய்ப்புள்ளது.

# தேர்தலில் தமிழக மக்களிடம் அமைதிப்புரட்சி ஏற்பட்டுள்ளது

## என்கிறார் ஜெயலலிதா



(சென்னை)

மக்கள் மத்தியில் அமைதிப் புரட்சி தோன்றியிருப்பதாக ஜெயலலிதா கூறினார். நேற்று அம்பேத்கர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, ஜெயலலிதா, கோடம்பாக்கத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

அதன் பிறகு செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது அவர், தேர்தல் ஆணையம் நியாயமாக செயற்பட்டது. தேர்தல் ஆணையத்தின் செயற்பாடுகளாலேயே மக்கள் அச்சமின்றி வாக்குச் சாவடிகளுக்கு வந்து தங்கள் வாக்குகளைப் பதிவு செய்தனர். அதனால்தான் வாக்குப் பதிவின் சதவீதம் அதிகமாகியுள்ளது.

மக்கள் மத்தியில் ஒரு அமைதிப் புரட்சி தோன்றியிருக்கிறது. 2ஜி அலைக்கற்றை ஊழல் மட்டுமல்லாமல் ஆளும் தரப்பின் பல்வேறு ஊழல்களைப் பற்றியும் மக்கள் தெளிவாகப் புரிந்து வைத்துள்ளனர். தேர்தல் முடிவுகளைப் பற்றி இப்போது கூறமுடியாது. காத்திருந்து பாருங்கள்... என்று ஜெயலலிதா கூறினார்.

தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் போட்டியிடும் ரிஷிவந்தியம் தொகுதியில் 78 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்டாலின் போட்டியிடும் கொளத்தூர் தொகுதியில் 60 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. சட்டசபைத் தேர்தல் அமைதியாகவும், நியாயமாகவும் நடந்து முடிந்தது. இந்த தேர்தலில் சுயேடசைகள் உட்பட அனைத்து அரசியல் கட்சியினரும் எங்களுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்தனர். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

# ஆளத் தெரிந்த கலைஞரே முதல்வர்

(சென்னை)



ஆளத் தெரிந்த மன்னன் கலைஞரே, ஆறாவது முறையாக முதல்வராகத் தேர்ந் தெடுக்கப்படுவது உறுதி என, நடிகர் வடிவேலு கூறினார்.

இத்தேர்தலில் தி.மு.க., அமோகமாக வெற்றி பெறும். ஏழை, எளிய மக்களுக்கு முதல்வர் கலைஞர் நிறைய நலத்திட்டங்களை வழங்கியுள்ளார். குறிப்பாக வியாபாரிக்குத் தான் தொழில் செய்யத் தெரியும். விவசாயிக்குத் தான் உழத் தெரியும். மன்னனுக்குத் தான் ஆளத் தெரியும் அந்த மன்னன் முதல்வர் கலைஞர் தான். அவர் ஆறாவது முறையாக முதல்வராக தேர்ந்தெடுக்கப்படுவது உறுதி. தி.மு.க தலைமையிலான கூட்டணி வெற்றிக் கூட்டணி. எதிரணி கூட்டணி வெத்துக் கூட்டணி என்றார்.

# உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் அரசுக்குத் தெரியாமல் மாற்றம் செய்யப்பட்டது

## அமைச்சர் ஹக்கீம் குற்றச்சாட்டு



(கொழும்பு)

அண்மையில் முன்வைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சித்துறை அமைச்சர் அரசாங்கத்துக்குத் தெரியாமலேயே தனக்குத் தேவையான சில மாற்றங்களைச் செய்திருப்பதாகவும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமிக்கும் விடயத்தில் ஒரு தனிநபர் தன்னகத்தே அதிகாரங்களை வைத்துக் கொண்டு இறுதி முடிவெடுப்பதற்கு இடமளிப்பது ஆபத்தானதெனவும் நீதியமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நடைபெற்ற அரசியல் பிரதிநிதிகளின் விசேடகூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

தற்போது முன்வைக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படுமானால் எதிர்காலத்தில் மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களிலும் திருத்தச்சட்டங்கள் கொண்டு வரப்படலாம்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தைப் பொறுத்தவரை சர்ச்சைக்குரிய விடயங்களில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து பேசி சில முடிவுகளை மேற்கொள்வதற்கு வசதியாக அதன் குழுநிலை வாக்கெடுப்பு பிற்போடப்பட்டுள்ளது. சிறுபான்மைக் கட்சிகளையும் சிறிய கட்சிகளையும் உள்ளூராட்சித் தேர்தல்கள் சட்டமூலம் பாதிப்பதன் காரணமாகவே ஆரம்பம் முதலே நாமும் ஏனைய சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளும் எதிர்த்து வந்திருக்கின்றோம்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைப் பொறுத்தவரை அதன் பாரம்பரிய ஆதரவுத் தளமான வட, கிழக்கில் பாரிய பாதிப்பை இச் சட்டமூலம் ஏற்படுத்தாது விட்டாலும்கூட ஒரு தேசிய அரசியல் கட்சி என்ற அடிப்படையில் நாடளாவிய ரீதியில் வட்டாரத் தேர்தல்முறை, வெட்டுப்புள்ளி போன்ற அம்சங்களில் பாதிப்புகள் ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தில் பலமுறை பேசி உடன்பாடுகள் காணப்பட்ட அம்சங்களில் இறுதி நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது. உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அதாவுல்லா அரசாங்கத்திற்கே தெரியாமல் தனக்குத் தேவையான சில மாற்றங்களைச் செய்துள்ளார்.

எல்லை நிர்ணய ஆணைக்குழுக்களை நியமிக்கும் விடயத்தில் ஒரு தனி நபர் அதாவது சம்பந்தப்பட்ட அமைச்சர் அதிகாரங்களைத் தன்னகத்தே வைத்துக்கொண்டு இறுதி முடிவுகளை மேற்கொள்ள இடமளிப்பது ஆபத்தானது. அத்துடன் தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களிலான எல்லை மீள்நிர்ணய ஆணைக்குழுக்களில் சிறுபான்மை இன பிரதிநிதிகளும் இடம்பெறுவது இன்றியமையாதது. வட்டாரங்களை வரையறுக்கும்போதும் இரட்டை அங்கத்தவர் தெரிவின் போதும் இனவிகிதாசாரம் உரிய முறையில் பேணப்பட வேண்டும்.

எல்லை மீள் நிர்ணயத்திற்கான தேசிய மற்றும் மாவட்ட ஆணைக்குழுக்களின் முன்னிலையில் சாட்சியங்களைப் பதிவு செய்ய வாய்ப்பு அளிக்கப்படுவது அவசியமாகும். இந்தச் சட்டமூலம் பிரதான கட்சிகள் இரண்டிற்கும் பாதிப்புகளை ஏற்படுத்தப் போவதில்லை. சிறுபான்மை மக்களின் கட்சிகளையும் சிறிய கட்சிகளையுமே பாதிக்கும். ஜே.வி.பி.க்கு இந்தச் சட்டமூலம் சாவுமணியாகக் கூட அமையலாம்.

பெரும்பான்மை மக்கள் அதிகமாக வசிக்கும் உள்ளூராட்சி அமைப்புகளை பொறுத்தமட்டில் எல்லா வட்டாரங்களிலும் வேட்பாளர்களை நிறுத்துவதில் சுயேச்சைக் குழுக்களும் சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளும் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். ஆரம்பத்தில் உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தை எதிர்த்து நாம் நீதிமன்றம் சென்றோம்.

கிழக்கு மாகாண சபை முதலமைச்சரின் ஒத்துழைப்புடன் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் இந்தச் சட்ட மூலத்தை நீதிமன்றத்தின் மூலம் தடுக்க முடிந்தாலும், பின்னர் இச் சட்டமூலம் அங்கு சமர்ப்பிக்கப்பட்டபோது முதலமைச்சரும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும் ஏனைய முஸ்லிம் கட்சிகளும் அதற்கு ஆதரவை வழங்கவேண்டிய அழுத்தமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. அப்போது கிழக்கு மாகாண சபை முஸ்லிம் அமைச்சர்கள் கபட நாடகமாடினார்கள்.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான திருத்தச் சட்டம் போன்று மாகாண சபை, நாடாளுமன்ற தேர்தல் சட்டங்களிலும் திருத்தங்கள் கொண்டு வரப்படலாம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## மீள்குடியேறிய மக்களுக்கு தற்காலிக குடிசைகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் கருநாட்டுக்கேணிப் பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள 80 குடும்பங்களுக்கும் தற்காலிகமாக குடிசைகளை அமைத்துக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசஅதிபர் ஏ.பத்திநாதன் தெரிவித்துள்ளார். இப்பகுதிகளிலிருந்து மக்கள் 1984ல் இடம்பெயர்ந்தமையால் எந்தக் குடியிருப்பும் இல்லாத நிலையில் சர்வதேச தொண்டர் நிறுவனம் தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொடுக்கின்றது. இம்மக்கள் நீண்ட காலமாக வவுனியா மெனிக்பாம் முகாமிலேயே தங்கியிருந்தனர். அவர்கள் கடந்தவாரம் தான் மீள்குடியமர அனுமதிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கு உடனடியாக 5ஆயிரம் ரூபா உதவிப்பணம் மற்றும் தகரம், சீமெந்து, சமையல் அறை உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு ஆறுமாத காலத்துக்கு நிவாரணம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என அரசஅதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

## லஞ்சம் வாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பில் கைது செய்யப்பட்டார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இலஞ்சம் வாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மட்டக்களப்பில் மணல் ஏற்றி வந்த ஒருவரிடம் இலஞ்சம் தருமாறு குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கேட்டுள்ளார். இதையடுத்து மணல் ஏற்றி வந்த இந்நபர் இப்பொலிஸ் உத்தியாகத்தரிடம் பணம் வழங்குவதற்கு நேர அவகாசம் கேட்டுள்ளார். பின்னர் இந்நபர் மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் இவ்விடயம் தொடர்பாக முறையிட்டுள்ளார். உதவி பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையுடன் மட்டக்களப்பு பொதுச்சந்தைக்கு அருகாமையில் வைத்துக் குறிப்பிட்ட இப்பொலிஸ் உத்தியோகத்தருக்கு மணல் ஏற்றி வந்த நபர் இலஞ்சப்பணத்தை வழங்கும் போது ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இப்பொலிஸ் உத்தியோகத்தரை மடக்கிப் பிடித்துள்ளனர். இதையடுத்து குறிப்பிட்ட பொலிசாரை மட்டக்களப்பு நீதிவான் நீதின்ற நீதிபதி முன்னிலையில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்ததாக மட்டக்களப்பு பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மீள்குடியேற்ற நடவடிக்கை பெருமளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் பூர்த்தி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 40 குடும்பங்கள் வரை மீள்குடியேற்றம் செய்யப்படவேண்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களை எதிர்வரும் 20 அல்லது 22 ஆம் திகதிகளில் மீள்குடியேற்றம் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



மக்கள் வங்கியில் நேற்று நடைபெற்ற “வனிதா வாசனா” சீட்டிழுப்பில் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மங்கலவிளக்கேற்றுவதையும், முதலாவது அதிர்ஷ்டசாலியைத் தெரிவுசெய்வதையும், கலந்துகொண்ட விருந்தினர்களையும் காணலாம். (படம் - கார்த்திகேயன்)

# அத்தியாவசியப் பொருள் விநியோகம் முறை தவறிய வியாபாரிகள் மீது பாய்ச்சல்

(கொழும்பு)

சுமார் 1400 கடைகளில் திடீரென நுகர்வோர் அதிகார சபையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்புத் தேடுதலின் மூலம் நுகர்வோர் சட்டத்தை மீறிய மற்றும் நிர்ணய விலைக்கு அதிகமாக பொருட்களை விற்பனை செய்த 700 வியாபாரிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை பணிப்பாளர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

மேலும், அவற்றுள் 300 வியாபாரிகள் காலாவதியான பொருட்களை விற்பனை செய்ததினாலும், 400 வியாபாரிகள் விலையினை காட்சிப்படுத்தாத காரணத்தினாலுமே கடும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரபல பாடகி சித்திராவின் ஒரே மகள் பரிதாப மரணம்



(சென்னை)

பிரபல பின்னணிப் பாடகி சித்திராவின் ஒரே மகள் நந்தனா நேற்றுக் காலை நீச்சல் குளத்தில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

சித்திராவுக்குத் திருமணமாகி 8 ஆண்டுகள் கழித்துத் தான் குழந்தைப் பாக்கியம் கிடைத்தது. அந்தக் குழந்தையின் பெயர் சத்ய சாய்பாபா நந்தனா (வயது-08)

சித்திரா தனது குடும்பத்தாருடன் துபாய் சென்றுள்ளார். அங்கு ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் நேற்று ரஹ்மானின் இசை நிகழ்ச்சியில் பாடுவதற்காக இருந்தார்.

இந்நிலையில், நேற்றுக் காலை நந்தனா எமிரேடஸ் பில்ஸ் வில்லாவில் உள்ள நீச்சல் குளத்தில் மூழ்கி பலியானார்.

# யானைகளுக்கு சரணாலயம்



(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்தின் கப்புகொள்ளேவ பிரதேசத்தில் கமநல சேவைகள் மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவின் ஆலோசனைப்படி, புதிய சரணாலயம் ஒன்றினை அமைக்க வனஜீவராசிகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. சரணாலயம் அமைக்கப்படவுள்ள பிரதேசத்தை அண்டியுள்ள மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு சரணாலயம் அமைக்கப்படவுள்ளதுடன் சுமார் எட்டாயிரம் ஏக்கரில் இச்சரணாலயம் அமையப் பெறவுள்ளது.

வடமத்திய, வடமேல், கிழக்கு மாகாணங்கள் உட்பட ஏனைய பகுதிகளில் வசிக்கும் காட்டு யானைகள் சுதந்திரமாக வாழ இச்சரணாலயத்தினூடாக வழியேற்படும் எனவும் வனஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# அத்தியாவசியப் பொருள் விநியோகம் நெடுந்தீவில் மக்கள் சேவை தாராளம்

## ப.நோ.கூ.சங்கத் தலைவர் பெருமிதம்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு மக்களின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய அளவில் நுகர்ச்சிப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் கையிருப்பில் உள்ளதுடன், தமிழ்-சிங்களப் புதுவருடத்தினைப் பொது மக்கள் கொண்டாடும் இவ்வேளையில், மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்குப் பொருட்களைக் கையிருப்பில் வைத்துள்ளதாக நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ஏ.டபிள்யு. அரியநாயகம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சங்கம் பல்வேறுபட்ட பொருளாதார, நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ள போதும், இயன்றவரை மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சங்கத்தின் இயக்குநர் சபையினர் திட்டமிடல்களை மேற்கொண்டு வருவதாகவும், எதிர்காலத்தில் சங்கத்தினை இலாபகரமாகக் கொண்டு செல்வதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (27)

# மீள்குடியேற்றம் பூர்த்தி கிளிநொச்சி செயலகம் அறிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 40 குடும்பங்கள் வரை மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களை எதிர்வரும் 20 அல்லது 22 ஆம் திகதிகளில் மீள்குடியேற்றம் செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சட்டவிரோத ஆயுத விநியோகம் தொடர்பில் முன்னாள் கடற்படை அதிகாரி கைவரிசை

(கொழும்பு)

பாதாள உலகக் கோஷ்டியினருக்கு ஆயுதங்களை விநியோகம் செய்த சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். 70 வயதான முன்னாள் கடற்படை உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் நடாத்தப்பட்ட சோதனையின் போது பல ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன. இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர் ஒருவரின் தகவலின் அடிப்படையில் இந்தத் தேடுதல் வேட்டை நடாத்தப்பட்டுள்ளது.

ஆறு துப்பாக்கிகள், 5020 துப்பாக்கி ரவைகள், இரண்டு கைக்குண்டுகள் போன்ற ஆயுதங்கள் குறித்த வீட்டிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இரண்டு தொலைநோக்கிகளும் மீட்கப்பட்டுள்ளதாகவும், இவை அனைத்தும் பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர்களுக்கு விற்பனை செய்வதற்காக வைக்கப்பட்டிருந்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாதாள உலகக் கோஷ்டி உறுப்பினர் என்ற போர்வையில் குறித்த வீட்டிற்குச் சென்று பத்தாயிரம் ரூபாவிற்கு கைத்துப்பாக்கி மற்றும் கைக்குண்டுகளை கவால்துறை உத்தியோகத்தர் ஒருவர் கொள்வனவு செய்தவுடன், இது தொடர்பாக கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து தொடர்ச்சியாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பிடப்பட்டுள்ளது.

# நிபுணர் குழுவின்....

செயலாளர் நாயகம் பான் கீ மூன் மேற்படி அறிக்கை உத்தியோகபூர்வமாகத் தனது கைகளுக்குக் கிடைத்தது முதல் மேற்படி விடயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். இவ்விடயம் தொடர்பாக மிக முக்கிய தீர்மானம் ஒன்றை இந்த வார இறுதியில் பான் கீ மூன் மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கை காலதாமதமின்றி உலகுக்கு அம்பலப்படுத்தும்படி உலகின் பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு இராஜதந்திர அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. எனினும், பக்கச்சார்பு எதுவும் அற்ற நடவடிக்கை ஒன்றுக்காக பான் கீ மூன் காத்திருப்பதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நிபுணர் குழுவின் அறிக்கையின் பிரதியொன்றை இலங்கை அரசுக்கு அளித்தமை தொடர்பாக பல சர்வதேச நிறுவனங்கள் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

போரின் இறுதிக்கட்டங்களில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து தனக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப் பட்ட நிபுணர்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் எடுக்கவுள்ள முடிவுகள் அடுத்த சில தினங்களில் தெரியவரலாம் எனத் தெரிகிறது. பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக்கை மேற்கோள் காட்டி நியூயோர்க் செய்தி நிறுவனம் ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. பான் கீ மூன் இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவதற்கு முன்னால் அதில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து தனது கவனத்தைச் செலுத்தி வருகிறார். அவர் அடுத்து எடுக்கவிருக்கும் முடிவுகு குறித்து இன்னும் சில தினங்களில் தெரியவரும் என்றும் பர்கான் ஹக் தெரிவித்துள்ளார். பான் கீ மூன் இந்த அறிக்கையை பொது மக்களுக்கு பகிரங்கப்படுத்துவதற்கு முன் னால் இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தது ஒரு மரியாதையின் நிமிர்த்தமேயன்றி வேறேதும் காரணங்கள் எதுவுமில்லை என்றும் பான் தெரிவித்தார். 2009 மேயில் போர் முடிவடைந்த கையோடு பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து இந்த மூன்று பேர் கொண்ட ஆலோசனைக் குழுவை நியமிப்பதாக அறிவித்திருந்தார். இதேவேளை இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்துவது இலங்கையின் ஜனநாயக விருத்திக்கு வழி வகுக்கும் என்று மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசியப் பணிப்பாளர் பிராட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

## புத்தாண்டுக்...

காலை 7.00 மணிவரை 212பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 82பேர் இன்னமும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிகிச்சை பெற்றவர்களில் பெரும் பாலானவர்கள் வெடி விபத்தினால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஒருசில வீதி விபத்துக்களிலும் சிலர் காயமடைந்து சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதேவேளை, நேற்றைய தினம் இருவர் வீதி விபத்தினால் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது என வைத்தியசாலை பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் மேலும் பலர் பட்டாசு விபத்துக்களினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## கோட்டைக்...

இழுத்துச்சென்று விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது முச்சக்கர வண்டியில் சென்ற சிறுமி ஒருவரும் அவரது தாயாரும் முச்சக்கர வண்டி சாரதியும் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தோர் பெரிய கல்லாறு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



பொதுசன நூலகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



# பாடசாலை உபகரணப்பொதிகள் பாதுகாப்பு படையினர் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பாதுகாப்பு படைவீரர்கள் பலதரப்பட்ட நலன்புரித் திட்டங்களில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். அந்தவகையில் தெல்லிப்பள்ளையில் அமைந்துள்ள பன்னாளை கனகசபை பாடசாலை மாணவர்களுக்கு, இராணுவத்தினரால் நன்கொடை வழங்கும் நிகழ்வொன்று அண்மையில் இடம்பெற்றது.

515ஆவது படைப்பிரிவுப் பிரதேசத்தில் அமைந்துள்ள கனகசபை ஆரம்ப பாடசாலையின், நாளாந்த மாணவர்களின் வருகை 50ஆகவுள்ள அதேவேளை இவர்கள் தமது கல்வியைத் தொடர உதவி தேவைப்படுபவர்களாகவும் உள்ளனர். இவர்களின் தேவையை அடையாளம் கண்ட 515ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் புவனேக ரன்தெனிய, இம் மாணவர்களுக்கு தேவையான பாடசாலை உபகரணங்களை கொழும்பில் அமைந்துள்ள ஜயோதனய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நன்கொடையாக வழங்க ஏற்பாடு செய்தார்.

பாடசாலைப் புத்தகப்பை, சாப்பாத்து, அப்பியாசக் கொப்பிகள், பேனைகள், பென்சில்கள் போன்ற உபகரணங்கள் அடங்களான ரூபா 3000 பெறுமதியான பொதிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வின் பிரதம அதிதியாக 51ஆவது படைப்பிரிவின் பொதுக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக வெல்கம கலந்துகொண்டதுடன், 515ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி பிரிகேடியர் புவனேக ரன்தெனிய, ஜயோதனய நிறுவனத்தின் செயலாளர் திரு. இந்திகா திலகஹெவ, பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர் மற்றும் பெற்றோர்களும் கலந்துக்கொண்டனர்.

# விபத்தில் நால்வர் பலி

பொத்துவில் அக்கரைப்பற்று பிரதான பாதையில் காஞ்சினன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு டிபர் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக் குள்ளானதில் மூன்று பெண்கள் பலியாகினர். இந்த அனர்த்தத்தில் காயமடைந்த 17 ஆண்களும் 15 பெண்களும் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களுள் கடுங்காயங்களுக்கு உள்ளானவர்கள் அம்பாறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சுற்றுலா சென்று திரும்பிக் கொண்டிருந்தவர்களே இவ்வாறு இந்த அனர்த்தத்தில் சிக்கியுள்ளனர்.

இதனிடையே, திஸ்ஸமாராம பிரதேசத்தில் இரு குழுக்களுக்கிடையில் நேற்று இரவு இடம்பெற்ற மோதலில், ஒருவர் பலியானார். பலியானவர் 45 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது. இவர் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்ட மேலும் ஐந்து பேர் திஸ்ஸமாரம வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பாரத் ஜயகொடி தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக திஸ்ஸமாராம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தொழில் அதிபர் மீது தாக்குதல் டுபாயில் இலங்கையரின் கைவரிசை

டுபாயில் இலங்கையரான தொழில அதிபர் ஒருவரின் கை விரல்கள் மூன்றை தொழில் போட்டியால் இலங்கையர்கள் நால்வர் வெட்டி எறிந்து உள்ளனர். பசிந்து லங்கா என்கிற பெயரில் உணவகம் ஒன்றையும், கொழும்பு சுப்பர் சலூன் என்கிற பெயரில் சிகை அலங்கார நிலையம் ஒன்றையும் அண்மைய நாட்களில் இத்தொழில் அதிபர் Bur Dubai நகரத் தில் திறந்து இருந்தார்.

ஆயினும் இவரின் ஸ்தாபனங்களுக்கு இலங்கையர்கள் மத்தியில் குறுகிய நாட்களுக்கு இடையிலேயே மிகுந்த அங்கிகாரம் கிடைத்து விட்டது. கடந்த 15 வருடங்களாக உணவகம் ஒன்றை Bur Dubai இல் நடத்திவருகின்ற இன்னொரு இலங்கையருக்கு இது மிகுந்த மனப் புழுக்கத்தையும், பொறாமையையும் ஏற்படுத்தி விட்டது. அச்சுறுத்தியும், மிரட்டியும் பார்த்தார். பலன் இல்லை.

தொழில் எதிரி மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டார். இவரின் ஆட்கள் நால்வர் ஆயுதங்களுடன் சென்று தாக்குதலை நடத்தினர். தலையில் நன்றாக நையப் புடைத்தனர். கை விரல்கள் மூன்றை வெட்டி எறிந்தனர். பாதிக்கப்பட்டவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு உள்ளார். தலையில் எட்டு இழைகள் போடும் அளவுக்கு காயம். விரல்களை பொருத்தி தைக்கின்றமைக்காக நான்கு மணித்தியால சத்திர சிகிச்சை.

ஆயினும் இரு விரல்கள் இனிமேல் இயங்க மாட்டா என்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றனர். தாக்குதல்தாரிகள் நால்வரும் குற்றங்களை இடம்பெற்று ஒரு மணித்தியாலத்துக்கு இடையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உள்ளார்கள். தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர். இவர்கள் குற்றம் செய்தபோது மது போதையில் இருந்து உள்ளனர். குற்றங்களை பொலிஸாருக்கு ஒப்புக் கொண்டு உள்ளார்கள்.

# விசர்நாய்க்கடி மரணம் அதிகம் தடுத்து நிறுத்த புதிய திட்டம்

விசர்நாய்க் கடியினால் ஏற்படும் மரணங்களைக் கட்டுப்படுத்துவதற்காக மக்களை தெளிவுபடுத்தும் திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கு கால்நடை வைத்தியர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். 'இதன் பிரகாரம் பத்து இலட்சம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசர்நாய்க்கடி ஒழிப்பதற்கான கால்நடைவைத்தியர்கள் ஒன்றியத்தின் டொக்டர் சமித் நாணயக்கார குறிப்பிட்டார்.

விசர்நாய்க்கடி தொடர்பில் மக்கள் மத்தியில் போதிய தெளிவின்மை காணப்படுவதே இலங்கையில் விசர்நாய்க்கடியினா[ல்] ஏற்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கை உயர்வடையக் காரணமாக அமைகின்றது என அவர் மேலும் கூறினார்.

# இலங்கை மீனவர்கள் தொடர்ந்தும் இந்தியத் தடுப்புக் காவலில்

இலங்கையைச் சேர்ந்த மேலும் ஐந்து மீனவர்கள் தொடர்ந்தும் இந்தியத் தடுப்புக் காவலில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட எட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் மேலும் ஐந்து பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இலங்கை மீன்பிடித் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த 5 மீனவர்களும் கடந்த 7ஆம் திகதி முதல் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# திருமலையில் திமிங்கிலம் விரட்டியடிக்கும் கடற்படை

## வேடிக்கை பார்க்கும் மக்கள் திரள்

(திருகோணமலை)

திருகோணமலை உட்துறைமுக பிரதேசத்தில் 30 அடி நீளமான திமிங்கலம் ஒன்று நேற்று வழிமாறி வந்துள்ளது. இதனை மீண்டும் ஆழ் கடலுக்கு அனுப்பி வைக்கும் முயற்சியில் பல கடற்படை படகுகள் ஈடுபட்டு வருகின்றன. பெருமளவிலான பொது மக்கள் உட்துறைமுக வீதியில் நின்று சுமார் 2 மணி நேரமாக வேடிக்கை பார்த்த வண்ணம் இருந்தனர். திருமலை துறைமுகப் பகுதிக்குள் இவ்வாறன பெரிய திமிங்கலம் வந்தது இதுவே முதல் தடவையாகும்.

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி பாக்கியலட்சுமி

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட க.சின்னத்தம்பி பாக்கியலட்சுமி 13.04.2011 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான பொன்னையா, பொன்னம்மாவின் அன்பு மகளும் (சின்னத்துரை இரத்தினத்தின் அன்பு மருமகளும்) புஸ்பரத்தினம், அமரர் அழகராசா, அருமைத்துரை அவர்களின் அன்பு சகோதரியும், ரவீந்திரகுமாரி (ஜேர்மன்) புஸ்பகுமாரி,ரஞ்சிதகுமாரி, சிறிதரன், உமாவதனா (கொலண்ட்), சியாமளாதேவி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வகுமார் (ஜேர்மன்), கண்ணன் (ரஜனி காரைநகர்) மூர்த்தி சிவபாலசுந்தரம் (வவுனியா), செந்தூர் செல்வன் (கொலண்ட்), சத்தியநேசன் (ஜேர்மன்), கஜனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயகாந்தன் (ஜேர்மன்) பிரசாந் (ஜேர்மன்), சகானா (ஜேர்மன்), செந்தூரன் (பிரான்ஸ்), கம்சா (இணுவில்), சிந்துஜா (இணுவில்), தூவதரன், சிறிபாக்கியா (ஏழாலை), நர்த்தனன் (ஏழாலை), சிம்மதி (ஏழாலை) ஆகியோரின் அன்புப்பேத்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று 15.04.2011 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை தாவடி இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் தெற்கு
சுன்னாகம் (115) T.P. 0777909798

தகவல்
க.புஸ்பகுமாரி (மகள்)

## கனகராயன் குளத்...

யிட்டிருந்தார்.

கனகராயன்குளத்தை அடுத்த பரமன்கிராய் பிரதேசத்தில் வைத்தே அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரதேசத்தில் இன்னும் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியும் பொருட்டு பிரதேசம் முழுமைக்கும் இராணுவத்தினர் தமது சோதனைகளை விரிவுபடுத்தியுள்ளனர்.

## உலகில்...

. பட்டியலில் ஜனாதிபதி ராஜபக்ஷ, அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவையும் பின்தள்ளி 28ஆம் இடத்தைப்பிடித்திருக்கும் அதேவேளை, ஒபாமா [illegible]ஆம் இடத்தில் இருக்கின்றார்.

2011ஆம் வருடத்தின் உல[க] சக்திவாய்ந்த தலைவர்கள் [பட்]டியலில் இடம்பெற்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராணுவ ரீதியில் பயங்கரவாதத்தை தோற்கடித்த உலகின் ஒரே தலை[வ]ர் என்று டைம்ஸ் சஞ்சிகையால் புகழாரம் சூட்டப்பட்டுள்ளார்.

65 வயதான அவர், மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவான ஒரு தலைவர் என்றும் சீனா, ரஷ்யா, இந்தியா உள்ளிட்ட மேற்கத்தேய எதிர்ப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டிக் கொள்வதில் வெற்றி கண்ட ஒரு தலைவர் என்றும் அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பொருளாதாரத்தில் துரித வளர்ச்சி

## மத்திய வங்கி அறிக்கை

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2010ஆம் ஆண்டில் 8 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜிட் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

34 வருடங்களின் பின்னர் இவ்வாறான பொருளாதார வளர்ச்சியை இலங்கை அடைந்திருப்பதாகவும் இந்த நாடு சுதந்திரமடைந்த பின்னர் இரண்டாவது தடவையாக உயர் பொருளாதார வளர்ச்சி பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இலங்கை மத்திய வங்கியின் 61ஆவது ஆண்டறிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தலைமையில் இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் வெளியிடப்பட்ட இந்நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## கப்பல் அகதிகள்....

இதுவே கனடியர்கள் அதிகம பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சியாக இருக்கிறது. கட்சி யின் தலைவர்கள் மிகவும் பண்பாகவும், நட்புரிமையுடனும் கலந்து கொள்ளும் இவ் விவாதம் இவர்களா இத்தேர்தலில் எதிர் எதிராகப் போட்டியிடுகிறார்கள் என்று தோன்றவைக்கும்.

இதற்கு நம்மூர் அரசியல் வாதிகள் விதிவிலக்கு. இந்த வருடம் இடம்பெறும் தேர்தலிற்கான விவாதம் நேற்று முன்தினம் ஆங்கில மொழியிலும் நேற்றுப் பிரெஞ்சு மொழியிலும் இடம்பெற்றது.

அதில் கண்சவேட்டிவ் கட்சியின் தலைவர் ஸ்ரீபன் கார்ப்பர், லிபரல் கட்சியின் தலைவர் மைக்கல் இக்நாரிப், புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக் லெய்டன் மற்றும் புளக் கியூபெக்குவா கட்சியின் தலைவர் கிளஸ் டுசேப்பே ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்விவாத்தின் போதே புளக் கியூபெக்குவா கட்சியின் தலைவரான கிளஸ் டுசேப்பே அவர்கள் கப்பலில் வருகை தந்த அகதிகளை வைத்து விளம்பரம் தயாரித்தது பிழையான விடயம் என்று கண்சவேட்டிவ் கட்சியின் தலைவரான ஸ்ரீபன் கார்பருக்கு சுட்டிக்காட்டினார்.

கம்போடியா, இந்தோனேசியா போன்ற இடங்களிலிருந்து முன்னர் இப்படி வருகை தந்த அகதிகள் மிகவும் சிறந்த கனேடியப் பிரஜைகளாக இருக்கிறார்கள் என்றும், எனவே இப்போது வருகை தருபவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்மானமற்ற முறையில் அறிவிப்பது தவறு என்றும் தெரிவித்தார்.

புளக் கியுபெக்குவா கட்சி கனடாவிலிருந்து பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாகாணம் பிரிந்து செல்ல வேண்டும் என்பதற்காக ஜனநாயக ரீதியில் போராடி வரும் ஒரு கட்சியாகும்.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## பகுதி -II

**01.** 1) மலைகளில்
2) கடலைப்
3) மகாவலி கங்கை
4) தண்ணீர் குடிப்பதற்காக
5) நீர் வீழ்ச்சிக்கருகில்
6) மீன்கள்
7) நீர்ப் பாதுகாப்பிற்காக
8) குளோரின்

**02.** 1) பாடினான்
2) கத்தியது
3) பாடினான்
4) திரித்தான்
5) கட்டினான்

**03.** 1) இல்லாததைப் பெற முயலுதல்
2) வெளியிட முடியாத நினைவு

**04.** 1) 1
2) 4
3) 3
4) 2

**05.** 1) என்னைப் பார்க்கவும்
2) மாலை வணக்கம்
3) காலை உணவு

**06.** 1) வீட்டுக்குப் போங்கள்
2) பாகற்காய்
3) பென்சில்

**07.** 1) 4
2) 3
3) 4
4) 1
5) 2
6) 4
7) 3
8) 1
9) 2
10) 4

**08.** 1) மின் உயர்த்தி
2) தைனமோ
3) மடி
4) மஸ்ஜித் / பள்ளிவாசல்
5) நாம்புவ

**09.** 1) பிரண்டை
2) நெல்லி
3) கண்டங்கத்திரி
4) ஊமத்தை

**10.** 1) தேனீ
2) கும்பிடுபூச்சி
3) சிலந்தி
4) இலையான்

**11)** 1) B-37
2) A
3) A-2
4) ·7
5) 9

**12)** 1) 309/=
2) 5l 250ml / 5250ml
3) 114kg 750g
4) 140/=
5) 1. 20cm
2. 13cm² / 13 சதுர சென்ரி மீற்றர்
6) 14 cm
7) 160 km
8) 4/4=1
9) 75/=
10) 6 கானில்

13) 1. மாதவனும் அவனது தோழர்களும் பாடசாலையை விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர்.
2. அவர்கள் வாழைப்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு வீதியில் தோலை எறிந்தனர்.
3. அவ்வீதியால் வந்த பெரியவர் ஒருவர் வாழைப் பழத்தோலில் வழுக்கி கீழே விழுந்தார்.
4. அவரது கண்ணாடி, பை என்பன நிலத்தில் விழுந்துவிட்டன.
5. அவ்வீதியால் வந்த பெரியவர் ஒருவர் அவருக்கு உதவி செய்தார்.
6. வாழைப்பழத் தோலை வீதியில் எறிவது தவறான செயற்பாடாகும்.

### புள்ளியிடல்

வினாத்தாள் II

| | | |
|---|---|---|
| வினா 01 | = | 12 புள்ளி |
| வினா 02 | = | 05 புள்ளி |
| வினா 03 | = | 03 புள்ளி |
| வினா 04 | = | 05 புள்ளி |
| வினா 05 | = | 03 புள்ளி |
| வினா 06 | = | 03 புள்ளி |
| வினா 07 | = | 10 புள்ளி |
| வினா 08 | = | 05 புள்ளி |
| வினா 09 | = | 06 புள்ளி |
| வினா 10 | = | 06 புள்ளி |
| வினா 11 | = | 10 புள்ளி |
| வினா 12 | = | 20 புள்ளி |
| வினா 13 | = | 12 புள்ளி |
| மொத்தப் புள்ளி | = | 100 புள்ளி |

(புதன்கிழமை வெளியான பகுதி II இற்கான புள்ளி)





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II
விடைகள்

# கல்வி முரசு

வெளியீடு 09



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்

## பகுதி -II

**01.** 1) கொழும்பு பாரதி கல்லூரியிலிருந்து
2) கண்டியைநோக்கி
3) கண்டியில்

**02.** 1) பால்
2) பற்கள்
3) தொலைக்காட்சி
4) கார்த்திகை

**03.** 1) புகைவண்டி
2) பேருந்து
3) குளிர்களி
4) மின்விசிறி

**04.** 1) மாணவன்
2) நான்
3) ஒன்பது
4) தம்பி

**05.** 1) 03
2) 02
3) 03
4) 02
5) 01
6) 02
7) 03
8) 02
9) 01
10) 01

**06.** 1) சரி
2) பிழை
3) சரி
4) சரி

**07.** 1) பாக்கு வெட்டுவதற்கு
2) சோடாமூடி திறப்பதற்கு
3) துணி அல்லது கடதாசி வெட்டுவதற்கு

**08.** 1) கடதாசி, தாவரப் பகுதிகள்
2) பதப்படுத்திய களி
3) தென்னோலை

**09.** 1) 3Kg 500g
2) 200m 20 Cm
3) 5l 500ml

**10.** 1) கடிகாரம் 2) தராசு

**11.** 1) 2Kg 2) 1000g

**12.** 1) முக்கோணம் 2) சதுரமுகி

**13.** 1) சதுரம் 2) செவ்வகம்

**14.** 1) ராகுலன் 2) கமலி

**15.** 10,000

**16.** 1) 10.2
2) 25.1
3) 40.25

**17.** 1) யாதவன், தேவன், ஆதவன், மாதவன், பிராகலதன்
2) ஆதவன், மாதவன், தேவன், யாதவன், பிராகலதன்

**18.** கிராம், இறாத்தல்

**19.** தெளிவான கருத்துள்ள வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக.


### புள்ளியிடல்


வினாத்தாள் II

| | | | |
|---|---|---|---|
| வினா 01 | 03 X 2 | = | 06 புள்ளி |
| வினா 02 | 04 X 2 | = | 08 புள்ளி |
| வினா 03 | 04 X 2 | = | 08 புள்ளி |
| வினா 04 | 04 X 1 | = | 04 புள்ளி |
| வினா 05 | 10 X 1 | = | 10 புள்ளி |
| வினா 06 | 04 X 2 | = | 08 புள்ளி |
| வினா 07 | 03 X 2 | = | 06 புள்ளி |
| வினா 08 | 03 X 2 | = | 06 புள்ளி |
| வினா 09 | 03 X 2 | = | 06 புள்ளி |
| வினா 10 | 02 X 1 | = | 02 புள்ளி |
| வினா 11 | 02 X 1 | = | 02 புள்ளி |
| வினா 12 | 02 X 1 | = | 02 புள்ளி |
| வினா 13 | 02 X 2 | = | 04 புள்ளி |
| வினா 14 | 02 X 1 | = | 02 புள்ளி |
| வினா 15 | 01 X 2 | = | 02 புள்ளி |
| வினா 16 | 03 X 2 | = | 06 புள்ளி |
| வினா 17 | 02 X 2 | = | 04 புள்ளி |
| வினா 18 | 01 X 2 | = | 02 புள்ளி |
| வினா 19 | 06 X 2 | = | 12 புள்ளி |
| மொத்தப் புள்ளி | | = | 100 புள்ளி |

(திங்கட்கிழமை வெளியான பகுதி II இற்கான புள்ளி)


**பொருத்தமற்ற படத்தின் கீழ்க் கோடிடுக.**



01


02


03


01


02



03


அ
01


E
02


P
03



01


02


03


01


02


03





**படத்தையும், கூற்றுக்களையும் அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.**



☆ விவசாயிக்குக் குறித்த நேரத்தில் தன் வேலையை முடிக்க முடியாமற் போனது.
☆ பிறரது வயலை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கிறான்.
☆ இன்று மிக மகிழ்ச்சியுடன் சாப்பிடாமலும் வேலை செய்தான்.
☆ இப்போது மிகவும் களைப்படைந்து விட்டான்.
☆ காளை மாடு அணைக்கட்டைக் கடந்து வீடு நோக்கிச் சென்றது.
☆ பிள்ளைகள் தமது தந்தையைக் காணாது முற்றத்தில் காத்திருந்தனர்.

01. படத்தில் காணும் மூன்று உயிரினங்களைப் பெயரிடுக.

02. இந்நிகழ்ச்சி எந்நேரத்தில் இடம்பெறுகின்றது?

..............................................................................................................................................

03. விவசாயி கொண்டு செல்லும் பொருட்கள்.

**பொருத்தமான எழுத்தை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக.**

01. வி........................யாட்டு (லை, ளை)
02. ம........................க்காலம் (லை, ழை)
03. ம........................ணெண்ணெய் (ன், ண்)
04. வி........................ணப்பம் (ண், ன்)
05. செய...................ளர் (ளா,லா)